விலைஅதிகரிப்பு
மார்ச் 15 முதல்
FALCON SCOOTERS
தற்போது எல்லா ... களிலும், விற்பனைக் குண்டு. பினன்ஸ் கடன் வசதியுண்டு.
பல்கன்
ஏஜென்சி
ஐந்துசந்தி,
யாழ்ப்பாணம்

RECEIVED 1980-3-05 PERIODICALS DIVISION LIBRARY

பக்கங்கள் 8

# ஈழநாடு The EELANAADU

50 சதம்

மலர் 22 மாசி 28 ரபி–ஆகி 23 இதழ் 30
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 11-3-80

விலைஅதிகரிப்புக்கு முன் வாங்குங்கள்
ஹொண்டா
மோட்டார் சைக்கிள்
250 CC; 350 CC.
எல்லா நிறங்களிலும் கிடைக்கும்
Falcon
Agency
FIVE JUNCTION,
JAFFNA. Phone: 685

# கச்சதீவிலிருந்து சட்டவிரோதமாக வந்த 11 இந்தியர் கைது!

[நமது நிருபர் சு. தர்மசிங்கம்]

**சட்டவிரோதமான முறையில் இலங்கைக்குள் பிரவேசித்த பதினொரு இந்தியர்கள் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.**

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய உற்சவத்திற்கு வந்து அங்கிருந்து வடபகுதிக் கரையில் இறங்கியபோது இவர்களை குடிவரவு, குடியல்வுத் திணைக்கள உத்தியோகத்தர்களும் பொலிசாரும் சேர்ந்து கைதுசெய்து காங்கேசன்துறையிலுள்ள வடபிராந்திய சட்டவிரோத குடியேற்றதடுப்புப் பொலிசாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இவர்களில் ஏழுபேர் குறிகாட்டுவான் இறங்குதுறையிலும், 4பேர் ஊர்காவற்துறையிலும் வைத்துக் கைது செய்யப்பட்டனர். 11 பேரில் 10 வயதுச் சிறுமி ஒருவரும், 20 வயதுப் பெண் ஒருவரும் உள்ளனர். இவர்களில் ஒருவரிடம் போலி பாஸ்போர்ட் ஒன்றும் இருக்கக் காணப்பட்டது.

தாங்கள் சட்டவிரோதமாக இலங்கைக்கு வந்ததை இவர்களில் எவருமே முதலில் ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டனராம். காங்கேசன்துறையிலுள்ள சட்டவிரோத குடியேற்றத் தடுப்புப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. ஏ. நல்லையாவின் தீவிரவிசாரணையின் பின்னரே தாங்கள் சட்டவிரோதமாக இலங்கைக்குத் திரும்பிவந்ததாகவும் விசாரணையின்போது ஒத்துக்கொண்டனராம்.

இவர்கள் எல்லோரும் இலங்கையில் இருந்து இந்தியாவுக்கு அனுப்பப்பட்டவர்கள் என்றும், அங்கு வாழமுடியாத நிலையிலேயே இலங்கைக்குத் திரும்பிவந்ததாகவும் விசாரணையின்போது தெரிவித்தனர்.

இவர்களில் தந்தை ஒருவரும், 10 வயது மகள் ஒருவரும் உள்ளனர். இவர்களுள் கைது செய்யப்பட்டுக் காவலில்வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் இன்று கொழும்புக்கு அனுப்பப்படுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஊர்காவற்றுறை இறங்குதுறையிலும், குறிகாட்டுவான் இறங்குதுறையிலும் வைத்துக் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளோர் விபரம் வருமாறு: சுப்பிரமணியம் பிள்ளை அரப்புளியான், ஹமீட், நாகராஜன், ரேவதி, சுல்தான் இப்பிருஹீம், கறுப்பண்ணன் ... யூசுப, ஏ. எச். சார்கோப்பு, எஸ். எஸ். எம். சுலைமான், ஏ. பிச்சை, ஏ. ஞானப்பிரகாசம், எஸ். முத்துலிங்கம். எஸ்.முத்துலிங்கம் இவர்களில் ஒருவரிடம் விசா இருந்தால் அவர் விசாரணையின் பின்னர் விடுதலை செய்யப்பட்டார். (கொ)

## தி.மு.க.வில் எட்மனும் சேர்ந்துகொண்டார்

[சென்னை]

முன்னாள் தமிழக உணவு அமைச்சர் திரு. எட்மண், அ. இ. அ. தி. மு. கழகத்தில் இருந்து ராஜினாமாச் செய்து, நேற்று தி. மு. கழகத்தில் சேர்ந்துகொண்டார்.

அ. இ. அ. தி. மு. கழக அரசாங்கம் கடந்த மாதம் 17ம் திகதி கலைக்கப்பட்டதைத் தொடர்ந்து அ. இ. அ. தி. மு. கழகத்திலிருந்து வெளியேறும் மூன்றாவது முன்னாள் அமைச்சர் திரு. எட்மன் ஆவார். இதற்கு முன்னர் முன்னாள் அமைச்சர்களான திரு. நாஞ்சில் மனோகரனும், திருமதி சுப்புலட்சுமியும் அ. இ. அ தி மு. கழகத்திலிருந்து வெளியேறி தி. மு. கழகத்தில் சேர்ந்து கொண்டனர்.

திரு. எட்மண் நேற்று நிருபர்கள்மத்தியில் கருத்து வெளியிடுகையில் தமது ஆதரவாளர்களுடனும், அ. இ. அ. தி.

(8-ம் பக்கம் பார்க்க)

## அமரர் 'பாலா' நிதி: ரூ. 33,500 வசூலானது

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தினரால் சேகரிக்கப்பட்டுவரும் "அமரர் பாலா நிதி"க்கு இதுவரை முப்பத்து மூவாயிரத்து ஐந்நூறு ரூபா கிடைத்திருக்கிறது என்று இ. த. ஆ. சங்கப் பொதுச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

மேலும் நிதி சேர்த்துக் கொண்டிருப்பதாகவும், தாங்கள் எதிர்பார்த்த இலக்கினை நிச்சயம் அடைய முடியும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

இதுவரை தாய்ச்சங்கத்திடம் கையளிக்கப்பட்ட நிதியில் நல்லூர்க் கிளையே கூடிய தொகையான ரூபா 5,085 சேர்த்துள்ள தென்றும், கோப்பாய் கிளை ரூபா 4,065 வழங்கி இரண்டாவது இடத்தையும் ரூபா 3710 வழங்கி, காங்கேசன்துறைக்கிளை மூன்றாவது இடத்தையும் பெற்றுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்நிதி சேகரிப்பதற்குரிய இறுதித் திகதி பெப்ரவரி 29ம் என்று தீர்மானிக்கப்பட்டிருந்தும் பல கிளைகளின் வேண்டுகோளுக்கிணங்க நிதி சேகரிக்கும் கடைசித் திகதி மார்ச் 25ம் திகதி வரை பின் போடப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ள திரு. த. மகாசிவம், சேகரித்த பணத்தை உடனடியாக நிதிச் செயலாளருக்கு அனுப்பி வைக்குமாறு கிளைச் சயலர்களைக் கோரியுள்ளார்.

## கூட்டணி அறிக்கை வெளிவராவிட்டால் நேரடி நடவடிக்கை!

### இளைஞர் பேரவை தீர்மானம்

(மட்டக்களப்பு நிருபர் தமிழினியவன்)

பாராளுமன்றத்தில், கூட்டணி ஆட்சிமன்ற உறுப்பினர்கள் சிலர் அமைச்சர்களைப் பாராட்டிப் பேசியது சம்பந்தமாக கூட்டணியின் அறிக்கை இதுவரை வெளிவரவில்லை. அண்மையில் கூட்டணிப் பொதுச்சபை கூடும் போது இதுசம்பந்தமான அறிக்கை வெளிவராத பட்சத்தில் தமிழ் இளைஞர் பேரவை நேரடி நடவடிக்கையில் இறங்கும்''

இவ்வாறு கோரும் தீர்மானம் மட்டக்களப்பு இளைஞர் பேரவை அலுவலகத்தில் நடைபெற்ற தமிழ் இளைஞர் பேரவையின் செயற்குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப் பட்டுள்ளது.

இம் மாதம் 23ந் திகதி மட்டக்களப்பில் விலைவாசி உயர்வைக் கண்டித்து தமிழ்இளைஞர்பேரவை பொதுக்கூட்டமொன்றை நடாத்துவதெனவும்இக்கூட்டத்திற்குகூட்டணி பாராளுமன்ற உறுப்பினர்களையும் அழைப்பதெனவும் மற்றொரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மேமாதத்தில் தமிழ்இளைஞர் பேரவையின் புதிய நிர்வாகத் தெரிவு டம்பெறுமெனவும் அதனைத் தொடர்ந்து ஜூன் மாத இறுதியில் தமிழ்இளைஞர் பேரவையின் இளைஞர் பேரவையின் மாநாட்டை நடத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேதினத்தை தமிழ்தொழிற்சங்க கூட்டணியுடனும், தமிழர் விடுதலைக் கூட்டணியுடனும் இணைந்து கொண்டாடுவதெனவும் இளைஞர் பேரவை

(8-ம் பக்கம் பார்க்க)

அறிவித்தல்

## லொறிகள் தேவை

காங்கேசன்துறை துறைமுகத்திலிருந்து தற்பொழுது கப்பலிருந்து இறக்கப்படும் மாமூடைகளை யாழ். மாவட்டத்திலுள்ள நாவற்குழி, யாழ்ப்பாணம் உணவுக் களஞ்சியங்களுக்கு ஏற்றிச் செல்வதற்கு லொறிகள் உடனடியாக தேவைப்படுகின்றன. கூலி உயர்வு வழங்கப்படும். உடனடியாக வேலை செய்வதற்கு கீழ்க் குறிப்பிடும் விலாசத்தில் தொடர்பு கொள்ளவும்.

தலைவர்,
யாழ். மாவட்ட கூட்டுறவுச் சேவை
துறைமுகச் சமாசம்,
25, முன் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 590 5196

உங்கள் தேவைகள் எதுவாயினும் அத்தனையும் நியாயவிலையில் கிடைக்கிறது எம்மிடம்!

விவசாயிகளின் தேவைகளுக்கு:
- நீரிறைக்கும் இயந்திரம் ● இரண்டு சில்லு உழவு இயந்திரங்கள்
- தெளிகருவிகள் ● உப உறுப்புக்கள் ● அல்கத்தீன் குழாய்கள்
- கிருமிநாசினிகள் மற்றும் விவசாய உபகரணங்கள்.
- மிளகாய், வெங்காயம், உருளைக்கிழங்கு போன்ற பயிர்ச் செய்கைகளுக்கான உரக்கலவைகள்

உபஉணவுப் பொருட்கள்:
- பூடு ● மிளகு ● கிலிம் (KLIM) பாலுணவு
- நெஸ்டம் (NESTUM) ● ஓவல்ரின் (OVALTINE)
"வெல்பாக்'' சாடின் டின்மீன்.
பாவனைப் பொருட்கள்: "கோல்மன்'' பெற்றோமாக்ஸ்
கால்நடைகளுக்கு: ● உணவுத்தீன் வகைகள்
● சகல மருந்து வகைகள்.

விரைவில் கிடைக்கவிருக்கிறது "ரெக்சின்ட்'' தைவான் பைசிக்கிள்கள். விலை ரூபா 750– மட்டுமே. கரியர், ஸ்ராண்ட், பெல், முன்லைட் இனாம்.
வர்த்தக விசாரணைகள்: கூட்டுறவுச் சங்கங்களுக்கு சலுகைகள் உண்டு!

ஸ்ரீலங்கா கூட்டுறவு சந்தைப்படுத்தும் சம்மேளனம் (ம. ப.)
Sri Lanka Co-op. Marketing Federation Ltd.,

தலைமைக் காரியாலயம்: "கூட்டுறவுச் சதுக்கம்'', 127, கிராண்பாஸ் வீதி, கொழும்பு – 14.
கிளை: 111, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (தொலைபேசி:(504)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### தேவை

பலசரக்கு வியாபாரத்தில் அனுபவம் உள்ள சேல்ஸ்மன் தேவை. தொடர்புகொள்ளவும். 18, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 5179

எலுமிச்சம் கோது நன்கு காய்ந்தது தேவை. மில்க்வைற் யாழ்ப்பாணம். 5178

### விற்பனைக்கு

ஒறிஜினல் திண்டுக்கல் இரும்புப் பெட்டியும், ஜேர்மன் இரும்புப்பெட்டியும். நேரில் பார்வையிடலாம் பெண்சி ஜுவலர்ஸ், 74/1, கஸ்தூரியார் றோட், யாழ்ப்பாணம். 5191

கரைச்சிப்பகுதிகண்டாவளையில் 35 ஏக்கர்வயல் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: அ. பொ. சின்னத்தம்பி, மில் சொந்தக்காரர், கண்டாவளை. 5190

வசாவிளானில் ஆறரைப் பரப்பு விவசாயக்காணியும், நான்குபரப்பு கல்வீடு வளவும் தனித்தனி / சேர்ந்து விற்பனைக்குண்டு. 14-3-80 வரை ஆவரங்கால் உபதபாற்கந்தோர் அருகாமையிலுள்ள கி. அருளம்பலம் என்பவருடைய கடையில் 2-00 மணி வரை தொடர்புகொள்ளவும். 5187

ஈ. எல். மொரிஸ் மைனர் ஓவர்கெட்வல்வ் மொடல் நான்கு கதவு அதிசிறந்த நிலை சொந்தப் பாவனை. ச, லோகேஸ்வரன், சங்கரவாசா, புத்தூர். 5195

### ஏலவிற்பனவு

யாழ்ப்பாணம் 65, பிரதான வீதி சண்முகம் மகாதேவா அவர்களிடம் 31-12-1977 வரை அடைவு வைத்து மீட்கப்படாத நகைகள் 10-04-1980 காலை 9-30 மணி தொடக்கம் அதே அடைவு கடையில் வைத்து பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

**வி. செ. குட்டிப்பிள்ளை,**
ஏலவிற்பனவாளர்.
643, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம். (5169)

## உயிர்ப்பலியைத் தடுக்க கோரிக்கை

(சுழிபுரம்)

சுழிபுரம் கிராமசபைப் பகுதியிலுள்ள பல தான்தோன்றிக் கோயில்களில் சென்ற சில வருடங்களாக நடைபெற்று வரும் உயிர்ப்பலியை இவ்வாண்டு புதிய சட்டத்திற்கு அமைய நடைபெறாது தடை செய்ய நடவடிக்கை எடுக்குமாறு சுழிபுரம் கிராமசபை விசேட ஆணையாளர், வலி மேற்கு உதவி அரசாங்க அதிபர் ஆகியோரைக் கோரும் மகஜர் ஒன்றை வழக்கம்பரை சனசமூக பஜனைச் சபையினர் அனுப்பிவைத்துள்ளனர். (கு)

## வட்டுக்கோட்டை கிராமசபை

## கேள்வி விளம்பரம்

பல கூறுள்ள கடைக்கட்டிடங்கள் அமைப்பதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் பதிவுத்தபால் மூலம் 27-03-80-ந் திகதி முற்பகல் 10 மணி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரங்கள் ரூபா 200,000/-க்கு மேல் அரசாங்க நிறுவனங்களுடன் அல்லது வேறு உள்ளூராட்சி மன்றங்களுடன் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களுக்கு மட்டுமே வழங்கப்படும்.

கேள்விப் பிணைப்பணம் ரூபா 500/-ம், மீளளிக்கப்படாத கேள்விப்பத்தி கட்டணமாக ரூபா 100/-ம் 25-03-80-ந் திகதி நண்பகல் 12 மணிக்கு முன்னர் இவ்வலுவலகத்தில் செலுத்திக் கேள்விப்பத்திரங்களின் இரு பிரதிகள் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப் பத்திரத்தின் ஒரு பிரதி இவ்வலுவலகத்திற்கும் மறு பிரதி யாழ்ப்பாணம் உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கும் அனுப்பப்படல் வேண்டும். மேலதிக விபரங்களை இவ்வலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம்.

**மு. சுப்பிரமணியம்,**
நிர்வாகத்தர்,
வட்டுக்கோட்டை கிராமசபை.

கிராமசபை அலுவலகம்,
வட்டுக்கோட்டை,
05-03-80 (5178)

# உணர்வுக்கு உந்துசக்தியாக விளங்கும் 'தோட்டக்காட்டினிலே!'

## நூல் வெளியீட்டு விழாவில் விமர்சனம்

(யாழ்ப்பாணம்)

''தோட்டக் காட்டினிலே'' என்ற சொல்லே மலையக இலக்கிய வளர்ச்சியினை வெளிக்காட்டி நிற்கின்றது. இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் பாதையிலே தான் இதுபோன்றபயன்களைப் பெற்றோம் என்பதையிட்டு அபிப்பிராய பேதமிருக்க முடியாது. இருபதாம் நூற்றாண்டின் கடைக்கூறின் உலக அரசியலிலும் சரி, பிற அலுவல்களிலும் சரி சொல்லடைவுகளே உள்ளர்த்தத்தையும் மெய்ப்பித்து பொச்சமற்ற வகையில் - டரிபஷையாகப் பயில்வதற்குரிய உணர்வு ஏற்பட்டமையும் சமாந்தரமாக நோக்க வேண்டும். அந்த வகையிலே ''தோட்டக் காட்டினிலே'' என்ற சொல்லே உணர்வெழுச்சிக்கு உந்து சக்தியாகவுள்ளது.

''போராட்டம் கூர்மையடைவதற்கான முதற்படிகளைச் செய்வதே ''தோட்டக்காட்டினிலே'' என்ற சிறுகதைத் தொகுதியின் அடிப்படை இலக்கு. எந்தவிதமான போராட்டத்தை நிகழ்த்துவ தென்பதை நிர்ணயிப்பதற்கான தெளிவினைக் கண்டுபிடிப்பதற்கும், இலக்கியத்தின் மூலம் பிரச்னைகளை எடுத்துச் சொல்லும் வகையால் மக்களுக்குத் துலக்கமுறச் செய்யும் வகையில்வெளியிடப்பட்ட சிறுகதைத் தொகுப்பாகவே இத் ''தோட்டக் காட்டினிலே'' என்ற தொகுப்பு நூல் அமைந்துள்ளது''

மேற்கண்டவாறு நெல்லியடியில் நடைபெற்ற ''தோட்டக்காட்டினிலே'' விமர்சன அரங்கில் திரு. க. நாகேஸ்வரன் பேசுகையில் குறிப்பிட்டார். திரு. நெல்லை நடேஸ் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் அவர் தொடர்ந்து பேசுகையில்,

''மலையக எழுத்தாளர் தெளிவத்தை ஜோசேப்பின் ''நாமிருக்கும் நாடே'' என்ற சிறுகதைத் தொகுப்பும், தற்பொழுது விமர்சனத்திற்கெடுத்துக்கொள்ளப்படும் ''தோட்டக்காட்டினிலே'' என்ற நூலும் பக்கம் பக்கமாக வைத்து தாரதம்மியம் காணப்பட வேண்டியன. தோட்டங்களில் வாழும் தொழிலாளர்கள் அனுபவிக்கும் இம்சைகளைக் கோடிட்டுக்காட்டும் [illegible] பெரும்பான்மையான கதைகள் இலக்கியச் சண்டேட்டத்தில் சிலமுழுமைகளைக் கொண்டிருக்காது விட்டபோதிலும் இன்றைய சூழ்நிலையில் தடம் பிறழாத சிந்தனையூடே காத்திரமான தொகுப்பு [illegible] சோமு பாலா வடிவேலன் ஆகியோர் புரிந்துள்ளனர். கலையைப் பொறுத்தவரையில் கலையிலக்கிய விமர்சகர்கள் கூறும் ஒரு அடிப்படைக் கருத்து ஞாபகத்திற்கு வருகின்றது: அதாவது கலையிலக்கியங்கள் அவ்வப்பிரதேசத்திலேயே வேர்கொண்டெழுகின்றன. இதனால் சர்வதேசக்கலை என்றில்லை என்பது தான் அது முதுகிழங்களையும் நபர் மரங்களையும் ஒன்றும் விலங்குகளையும் வகைமாதிரிக்கு உதாரணங்களாக்கி மலையக மக்கள் வாழ்வின் குறியற்ற நிலைமையைக் கவைபடக் கூறும் வகையால் இத்தொகுப்பு நயமுள்ளதாக்கியுள்ளனர். எனினும் மலையகமக்களது சில நெறியற்ற நடத்தையும் சிலசிக்கல்களை மேலும் வளர்த்துச் சென்றுவிடுகின்றது என்பதையும் கூறாமல் விடமுடியாது.

'தோட்டக்காட்டினிலே' என்ற தொகுதியிலடங்கிய முதற்கதை ''பார்வதி'' என்பது மலரன்பனின் இராமாயணக்கதை கூறும் நடையானது வெறுமனே அவளது வாழ்வின் இன்னலை இழைத்துச் சொல்வதற்காக மட்டும் கையாண்ட உத்தியல்ல அதுமலரன்பனது பரம்பரையின் சாராம்சம் உடலியல், கல்வியியல், மொழியியல், சமூகவியல் போன்றவைபற்றினூடே விழைந்ததாரபிறுக்க வென்றே கூறலாம். யாழ்ப்பாணத்தாருக்குக் ''கந்தபுராண கலாசாரமென்று'' இந்திய மக்களது வாழ்வில் ''இராமாயண பாரத கலாசாரம் என்பது தான் இலக்கிய வாழ்வின் தடம் அதனது க்கத்தால் விழைந்த கதாசிரியரது உணர்வுகளையும் மீறிய ஒரு ஓட்டம் அக்கதையிலுண்டு யாழ்ப்பாணத்து மண்ணில் மலையக இலக்கியங்களை அறிமுகப்படுத்தும் முயற்சி பிறிதொருவகையில் சற்றுக் கூர்மையாக ஆராயப்படவும் வேண்டியதே வாழ்வெப்பின்னணியை சற்று சுற்றிவர முள்வேலி என்ற நினைப்புடன் வாழும் மலையக மக்களது. அரசியல் கூர்ப்பு மார்க்கம் மேலும் நிர்ணயமாக வேண்டும். என்பதையே கூறவிழைகின்றேன்'' என்றார்.

உரையாளர்கள் கே. தங்கவடிவேல் ஆகசி கந்தசாமி ஆகியோரும் விமர்சனம் செய்தார்கள். கருத்துப்பரிமாறலும் இடம் பெற்றது. கதாசிரியர்கள் மாத்தளை சோமு மாத்தளை வடிவேலன் ஆகியோர் பதிலுரை வழங்கினார்கள். (நா)

## தமிழர்கள் அவதி

(மட்டக்களப்பு)

கோறளை வடக்கு வாகரை உதவி அரசாங்க அதிபராக களுவாஞ்சிக்குடியில் முன்பு கடமையாற்றிய திரு. எஸ். பெரேரா நியமிக்கப்பட்டுள்ளார்.

95 சதவீதமான தமிழர்கள் வாழும் இப்பகுதியில் இவருக்கு தமிழ் முற்றாகத் தெரியாமையால் இப்பகுதித் தமிழர்கள் கடந்த இரு மாதங்களாக பெரும் தொல்லை அடைகிறார்கள். (ச)

## கே. ஜீ. எக்ஸ்பிரெஸ் பஸ் சேவை

சாயக்கூடிய, வசதியான, ஆடம்பரமான பஸ்கள் தினசரி கீழ்க்கண்ட இடங்களிலிருந்து புறப்படும்:

**கொழும்பு / யாழ்ப்பாணம்**

வெள்ளவத்தை மாணிக்க விநாயகர் கோவிலடி
லோரன்ஸ் ரோட் — இரவு 7-30 மணி
கோட்டை புகையிரத நிலையம் — இரவு 8-00 மணி

**யாழ்ப்பாணம் / கொழும்பு**

வெலிங்டன் தியேட்டர், யாழ்ப்பாணம் இரவு 8-00 மணி

முன்பதிவு செய்யும் இடங்கள்:

இராஜேஸ்வரி ஹோட்டல்,
69, நொறிஸ் றோட், கோட்டை.
தொலைபேசி: 25939 பிற்பகல் 2-00 மணிமுதல் இரவு 7-00 மணிவரை

பிளாசா தியேட்டர், வெள்ளவத்தை.
தொலைபேசி: 88070 பிற்பகல் 1-30 மணிமுதல் இரவு 10-00 மணிவரை

காமினி தியேட்டர், மருதானை.
தொலைபேசி: 93810 காலை 9-00 மணிமுதல் இரவு 10-00 மணிவரை

வெலிங்டன் தியேட்டர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 559 காலை 8-00 மணிமுதல் இரவு 10 00 மணிவரை

**கட்டணம் ரூ. 50 - (ஒரு வழி மட்டும்)**

பயணம் செய்யும் போது பணத்தை உங்களுடன் எடுத்துச் செல்லவேண்டியதில்லை. கீழ் குறிப்பிட்ட இடங்களில் உங்கள் பணத்தை ஒப்படைக்கவோ பெற்றுக்கொள்ளவோ முடியும்.

★ பிளாஸா தியேட்டரில் ரூபா 1000/-க்கு உட்பட்ட தொகை ஒப்படைக்கவோ அல்லதுபெற்றுக் கொள்ளவோ முடியும்

கே. ஜீ. இன்டஸ்ரீஸ்,
ஸ்ரீ சங்கராஜமாவத்தை,
கொழும்பு.
வெலிங்டன் தியேட்டர்,
யாழ்ப்பாணம்.

எத்தொகையும் ஒப்படைக்கவோ பெற்றுக்கொள்ளவோ முடியும்

★ காலை 6 மணிக்கு பஸ்கள் கொழும்பு/யாழ்ப்பாணம் சென்றடையும் 5132

## விசேட வெகுமதி

பிறிக்ஸ் அன்ட் ஸ்ட்ராட்டன் இயந்திரத்துடன் ஒரு பம்பைக் கொள்வனவு செய்யும் ஒவ்வொரு விவசாயிக்கும் 50/- ரூபா பெறுமதியுள்ள விசேட வெகுமதி உரிமைச் சீட்டு ஒன்றை வழங்க முன்வந்துள்ளோம். இந்த உரிமைச் சீட்டைக் கொண்டு, விவசாயிகள் தங்களின் அபிமானமுள்ள ஹேக்கெம் விவசாய இரசாயனப் பொருட்களை ஹேக்கெம் வியாபாரிகளிடம் கொள்வனவு செய்யலாம்.

இயந்திரம் வாங்கிய பற்றுச்சீட்டையும் உதிரிப்பாகப் புத்தகத்தையும் எமக்கு அனுப்பினால் போதும். உடனடியாக நாம் அந்த பற்றுச் சீட்டையும் உதிரிப்பாகப் பதிவேட்டுப் புத்தகத்தையும் சேர்த்து விசேட வெகுமதி உரிமைச் சீட்டொன்றை உங்களுக்குப் பதிவுத் தபாலில் அனுப்பி வைப்போம்.

இப்பரிசுத்திட்டம் 15. 11. 79 இலிருந்து 31. 3. 80 வரையிலும் நடைமுறையிலிருக்கும்.

விபரங்களுக்குத் தொடர்பு கொள்க : பொறியியல் விற்பனை, பராமரிப்புப் பகுதி

4 CYCLE BRIGGS & STRATTON

**ஹேலீஸ் லிமிட்டெட்**
25, பொஸ்டர் ஒழுங்கை கொழும்பு - 10.
தொலைபேசி: 96331 - 6.

பம்பு வியாபாரிகளுக்கும் விசேட சன்மானம்!
உங்களால் விற்பனை செய்யப்படும் பம்புகளுக்கு நாம் வழங்கும்
ஒவ்வொரு 25 விசேட வெகுமதி உரிமைச் சீட்டுகளுக்கும்
உங்களுக்கு ரூபா 500/- சன்மானம்!

Mel Ads

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

சிந்தனைக் கெட்டாத ஒன்றைப் பற்றித் தர்க்கிப்பது பயனற்ற செயலன்றி வேறு யாதாகும்!

— மகாத்மாகாந்தி

## மக்கள் கருத்து

## போதனா மொழியில் வர்ணனை வேண்டும்

எமது பெரும் பாடசாலைகளில் அந்நிய ஆட்சிக்காலத்தில் ஆங்கிலமே போதனா மொழியாக இருந்ததென்பதை யாரொருவரும் மறந்துவிடக்கூடாது என்ற வரலாற்று உணர்ச்சியுடன், யாழ். மத்திய கல்லூரி விளையாட்டு மைதானத்தில் வருடாந்த நிகழ்ச்சியாக இடம் பெறும் பெரும் போட்டியின்போது, மாணவர் போதனா மொழியாக தேசிய மொழிகள் இடம் பெற்றிருந்த பொழுதிலும்கூட, இன்னமும் பெரும் போட்டி சம்பந்தபட்ட ஒலிபரப்பு வர்ணனைகள், நுழைவுச் சீட்டுக்கள். உத்தியோகத்தர் அட்டைகள் ஏன் சிறப்பு மலரையும் ஆங்கில மொழியிலேயே இடம் பெறச் செய்துவருகிறார்கள்.

மேற்படி ''பெரும் கிரிக்கட் போட்டி'' நிர்வாகிகளது வரலாற்று உணர்வு இப்படியாகவா வெளிப்படவேண்டும். சம்பந்தப்பட்ட கல்லூரிகளின் போதனா மொழி தமிழாக இருப்பதால் அவை தமிழ்ப் பாடசாலைகளாகக் கருதப்படுமே என்ற தாழ்வு மனப்பான்மையின் வெளிப்பாடாகவா, இல்லை முன்னொருகாலத்தில் அந்நியர் இந்நாட்டில் ஆதிக்கம் செலுத்திவந்த காலகட்டத்தில், இப்பாடசாலைகளின் போதனா மொழியாக ஆங்கில மொழியே இருந்தது என்பதைச் சதா நினைவுபடுத்த வேண்டுமென்பதற்காகத் தானோ இவர்கள் பாடசாலைப் பொது வைபவங்களில் ஆங்கில மொழியைக் கட்டி அழுகிறார்கள்.

உலக மொழியான ஆங்கில மொழியைத் தாழ்வுபடுத்தும் நோக்கம் எமக்குச் கிஞ்சித்தும் கிடையாது. ஆனால் ஏனைய வளர்ச்சியடைந்த நாடுகளில் மாணவர் போதனா மொழியை விடுத்து, வேற்று மொழிகளிலா வைபவங்களை நடத்துகிறார்கள் என்பதை எமது பெரும் பாடசாலை நிர்வாகிகள் உணர வேண்டும். உலக மொழியான ஆங்கில மொழியை நாம் உதாசீனம் செய்யக்கூடாது ஒத்துக்கொள்கிறோம். ஆயின் அதற்காக காலனித்துவத்தின் எச்ச சொச்சமாக அதனைப் பாடசாலைப் பொது வைபவங்களில் பிரயோகியாதவாறு இருப்போம்.

சிறப்பாக எதிர்வரும் 21, 22-ம் திகதிகளில் யாழ். நகரில் இடம் பெறும் கிரிக்கட் போட்டியிலாவது காலனித்துவத்தின் எச்ச சொச்சமாக மேற்படி பாடசாலைப் பாரம்பரியப் போக்கென்று சொல்லி, மாணவர் போதனா மொழி அசட்டை செய்யப்படாதிருக்க போட்டி நிர்வாகிகள் பார்த்துக்கொள்வார்களாக.

இன்பரசு
[சுண்டிக்குளி.]

## மெய்கண்டான் பொன்விழா

(பண்டத்தரிப்பு)

காரைநகர் மெய்கண்டான் வித்தியாலய பொன்விழாவை இம் மாத இறுதியில் சிறப்பாக நடத்துவதென்று மேற்படி வித்தியாலய அபிவிருத்திச்சங்கம் தீர்மானித்துள்ளது. (கு)

# இல்லறத்தில் நுழைந்தாலும் இலட்சியத்தை கைவிடோம்

### மட்டுநகர் வரவேற்பில் காசி, மாவை கூட்டாக அறிவிப்பு

(மட்டக்களப்பு)

இல்லற வாழ்வில் நுழைந்தாலும் எம் தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்தின் இலட்சியப் பாதையை கைவிடமாட்டோம் என்று கவிஞர் காசி ஆனந்தன் கூறினர்.

அண்மையில் இல்வாழ்வில் நுழைந்த தமிழ் இளைஞர் பேரவையின் அமைப்பாளர்களான காசிஆனந்தன், மாவை சேனாதிராஜா தம்பதிகட்கு மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட தமிழ் இளைஞர் பேரவையினரால் மட்டக்களப்பு செல்வநாயகம் ஞாபகார்த்த மண்டபத்தில் நடாத்திய வரவேற்பு விழாவில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினர்.

ஒலிபெருக்கி ஆடம்பரமின்றி பேரவை அமைப்பாளர் திரு. இரா. வாசுதேவா தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திரு. காசிஆனந்தன் நன்றி தெரிவித்து மேலும் பேசுகையில் கூறியதாவது:

''இத்திருமண வரவேற்பு விழா எனக்குரிய விழா அல்ல. தம்பி சேனாதிராஜாவிற்குரிய விழாவாகும். ஏழையான எனது திருமணத்தை எட்டு மாதங்களுக்கு முன்பு யாழ்ப்பாண மக்கள் தமது திருமணம்போல் சிறப்பாக நடத்தினர்கள். எனக்கு மட்டுநகரில் வரவேற்பு வைப்பதற்கு ஏற்கனவே ஏற்பாடுகளைச் செய்திருந்தார். ஆனால் அவசரகால சட்டம் அமுலுக்குவந்தாலும் எமது விடுதலை வீரர்களில் ஒருவரான இன்பம் படுகொலை செய்யப்பட்ட நிகழ்ச்சியினாலும் அதனை வேண்டாமெனக் கூறிநிறுத்தினேன்.

''குடும்ப வாழ்க்கையில் நாங்கள் நுழைந்தாலும் எங்கள் இலட்சியப் பாதையை கைவிடமாட்டோம். உலகின் விடுதலை இயக்கங்களின்புரட்சியாளர்கள் வரலாற்றைப் பாருங்கள் இந்திய விடுதலை இயக்கமுன்னோடியான சுவாஸ் சந்திரபோஷ், சீனப் பெருந்தலைவர் மாசேதுங், கம்யூனிஸ்ட் உலகைதந்த லெனின் போன்றோர் காதல் திருமணம் புரிந்தவர்கள் தங்கள்விடுதலைப் பாதையைக் கைவிடவில்லை. அவர்கள் இலட்சியப்போராட்டத்தை திருமண வாழ்க்கை தடைப்படுத்தமாட்டாது. என் வாழ்வில் பிடிவாதம் என்றும் உண்டு. இதனை யாரும் தடைசெய்முடியாது.

''எனது திருமண பதிவின் பின்பு 3 தடவை சிறைசென்று வந்துள்ளேன். தாலிகட்டிய பின்பு இருதடவை நீதிமன்றம் சென்றுவந்துள்ளேன். பாராளுமன்ற கதவு திறக்காவிடினும் சிறைச்சாலைக் கதவு எனக்கு என்றும் திறந்திருக்கும்

''எமது விடுதலைப்போராட்டத்தில் மரணம் என்றாலும் நாம் சந்திக்கத தயாராய் உள்ளோம். மரணம் என்னும் சொல் அமங்கலமான சொல். ஆனல் விடுதலை வீரரின் வாழ்வில் அது மங்களமானது. அவனின் மரணத்தில் மங்களம் உண்டு. போராட்டம் என்று முடிவுபெறுமோ அன்று தான் விடுதலை வீரனுக்கு ஓய்வு கிடைக்கும் என்றார்''.

### மாவை சேனாதிராசா நன்றி

மாவை சேனாதிராஜா நன்றி தெரிவித்துப்பேசுகையில் கூறியதாவது:

நான் என் ஆரம்ப மாணவப் பருவத்தில் இருந்து அறிஞர் அண்ணா, கருணாநிதி, போன்றவர்களின் பகுத்தறிவுக் கொள்கையை பின்பற்றிவந்தவன். எவ்வித ஆடம்பரமுமின்றி அமைதியை விரும்புகின்றவன். என்திருமண விழாவை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடத்த விரும்பினர்கள். நான் மறுத்தேன். பகுத்தறிவு கருத்துக்கு முக்கியத்துவம்கொடுக்க வேண்டுமென்ற கொள்கையில் பகுத்தறிவு அடிப்படையில், தமிழர் மரபில் ஆரிய முறைகளை பின்பற்றாமல் வீட்டில் நடத்தினோம். சாதிக்கொடுமையைத் தூக்கிவீசினேன்.

''விடுதலைப் போராட்டமும் ஒன்றுதான் வாழ்க்கைப் போராட்டமும் ஒன்றுதான். வாழ்க்கைப் போராட்டம் விடுதலைப் போராட்டத்தை தடைசெய்ய முடியாது. அமெரிக்க புரட்சிவாதி கஸ்ரோ, அவரின் தம்பி ரவுஸ் கஸ்ரோ, கொரில்லா இயக்கத்தின் வழிகாட்டி ஜெனரல் கியூராவ் போன்ற விடுதலை வீரர்கள் திருமணம் புரிந்தவர்கள். இவர்கள் தங்கள் விடுதலைப் போராட்டத்தைக் கைவிட்டார்களா? இல்லை. அதே போல் நாமும் கைவிடப்போவதில்லை

''கடந்த காலங்களில் அனுபவித்த துன்பம், சித்திரவதை இவைகளைத் திருமணத்தின் பின்பும் அடையத தயாராய் உள்ளோம். யுத்தக்களரி என்றாலும் சந்திக்க தயாராய் உள்ளோம் எங்கள் போராட்டம் மாறுபட்ட போராட்டமாகவும் அமையலாம் என் இதயம் தமிழ்ஈழம்தான். நான் தமிழ்ஈழத்திற்கு உரியவன்'' என்றார்.

மற்றும் பட்டிருப்பு பாராளுமன்ற உறுப்பினர் திரு. பூ. கணேசலிங்கம், கற்குடா தொகுதி கூட்டணி அமைப்பாளர் திரு. சி. சம்பந்தமூர்த்தி, தமிழ் இளைஞர் பேரவை கல்முனைத் தொகுதி அமைப்பாளர் திரு. இரா. பன்னீர்ச்செல்வம், பொத்துவில் தொகுதி திரு. எஸ். குருநாதபிள்ளை, தமிழரசுக்கட்சி ஆரம்பகால உறுப்பினர் திரு. மு. பாலசிங்கம் உட்படப் பலர் ஆசியுரை வழங்கினர். பேரவையின் சார்பில் திரு. பொன். வேனுதாஸ் நன்றி கூறினர். (கு)

# யாழ்.வீரர்களின் திறமையை வெளிப்படுத்த வேண்டும்

உலக சாதனைகள் வரிசையில் புதிய திருப்பம் ஒன்றினை ஏற்படுத்தி, பதினைந்து ஆண்டுகளில் பதினொரு சாதனைகளை நிலைநாட்டி, இலங்கையின் தேசியச் சொத்து என்று அமைச்சர்களால் பாராட்டப் பட்டவர், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தமிழ் மகன் ஆழிக்குமரன் ஆனந்தனே. இவ்வாறு விளையாட்டுத்துறையில் பல சாதனைகளைத் தொடர்ந்தும் பல தமிழ் இளைஞர்கள் புரிந்து கொண்டே வருகின்றனர். சாதனைகள் என்றாலே யாழ்ப்பாணம் என்னுமளவிற்கு யாழ் இளைஞர்கள் தமது திறமையை வெளிக்காட்டி வருகின்றனர்.

-எஸ். குகநாதன்-

தற்போது கொழும்பில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில்கூட, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நகுலேஸ்வரன், சாந்திகுமார் (யாழ். மத்திய கல்லூரி முன்னாள் வீரர்கள்) விளையாடி வருகின்றனர்.

விளையாட்டுத்துறையில் பல சாதனைகளைப் புரிந்த, யாழ்ப்பாணத்தில் புகழ்பெற்ற கிரிக்கட் போட்டியான யாழ் மத்திய கல்லூரி - புனித பரியோவான் கல்லூரிக் கிரிக்கெட் போட்டி இம்மாத இறுதியில் நடைபெறவுள்ளது. எமதுவீரர்களின் திறமையைப் பலரும் அறிய வாய்ப்பு ஏற்படவேண்டுமானல் இப்போட்டியைச் சகல மக்களும் காணும் வாய்ப்பு ஏற்படவேண்டும். ஆனல் அது எவ்விதத்திலும் சாத்தியமற்றது. எனவே அப் போட்டி பற்றிய நேர்முக வர்ணனையை இலங்கை வானொலியில் ஒலிபரப்பினால் எமது திறமைகளைச் சுலபமாக வெளிக்கொணரலாம்.

வருடாவருடம் இப்போட்டிக்கு இரு கல்லூரிகளினதும், பழைய மாணவர்கள் எங்கிருந்தாலும் எந்தச் செலவையும் பொருட்படுத்தாது இங்கு வந்தே பார்வையிட்டு வருகின்றனர். இவர்களுக்கும் தேவை ... கொழும்பில் நடைபெறும் பிரபல கல்லூரிகளின் கிரிக்கட் போட்டிகளின்போது, கொழும்பிலுள்ள யாழ்ப்பாணத்தவர்களின் பிரபல நிறுவனங்கள் தாமாக முன்வந்து வானொலியில் நேர்முக வர்ணனை செய்வதைச் சகலரும் அறிவர், ஆனல் அவர்கள் தமது சகோதரர்களின் திறமையை வெளிப்படுத்தக்கூடிய வகையில் இங்கு நடைபெறும் போட்டிகளை வானொலியில் வர்ணனைசெய்ய உதவ முன் வருவதில்லை.

திறமையுள்ள தமிழ் வீரர்கள் பலர் இருந்தும், இலங்கைக் கிரிக்கெட் குழுவில் இடம்பெற முடியாமைக்குப் பல காரணங்கள் இருந்தாலும் அவர்களின் திறமையை வெளிப்படுத்தக்கூடிய வகையில் இங்கு எதுவும் செய்யப் படுவதில்லை. எனவே இங்கு நடைபெறும் போட்டிகளை வானொலியில் வர்ணனைசெய்ய இங்குள்ள பிரபல நிறுவனங்களாவது முன்வரவேண்டும்,

யாழ். மத்திய-பரியோவான் கல்லூரிகளுக்கிடையேயான இப் போட்டியின் போது மைதானத்தில் ஒலிபெருக்கியில் செய்யப்பட்டுவரும் வர்ணனை தனி ஆங்கிலத்திலேயே செய்யப்பட்டுவருகிறது. பல வருடங்களாகத்தமிழிலும் வர்ணனை செய்யுமாறு கோரப்பட்டு வருகின்றபோதிலும் அதனை நிர்வாகத்தினர் கவனிப்பதாகத் தெரியவில்லை.

அண்மையில் சென்னையில் நடைபெற்ற இந்திய,பாகிஸ்தான் கிரிக்கெட் போட்டியின் போதுகூட சென்னை வானொலி தமிழில் வர்ணனைசெய்தது. கிரிக்கெட் என்றால் என்ன என்பதைக்கூடத் தெரியாதவர்கள்கூட அந்த வர்ணனையைக் கேட்டு அந்த விளையாட்டில் ஆர்வம் கொள்ளுமளவிற்குச் சிறப்பாகவும் அழகாகவும் தமிழில் வர்ணனை செய்யப்பட்டது, அதேபோல மைதானத்திலும் தமிழில் வர்ணனை செய்யக் கல்லூரி நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## "தபாற்சேவை புனிதமானது"

(வண்ணார்பண்ணை)

''தபால் ஊழியர்களின் சேவை மிகவும் நம்பிக்கைக் குரித்தான சேவையாகும். இப் புனிதமான சேவையை நாம் நியமனத்துடனும் கடமையுணர்ச்சியுடனும் செய்வதன் மூலம் நாம் மேலும் உயர்ச்சியடையமுடியும்.''

இவ்வாறு தபால்தந்தி ஊழியர் சங்க யாழ். கிளையின் செயலாளரும் தபால் இலாகா கடன்வழங்கு சபையின் செயலாளருமான திரு. அ.யோசெப் யாழ். தபால் நிலையத்தில் நடந்த பிரிவுபசார விழாவிற்குத் தலைமைதாங்கி உரையாற்றுகையில் தெரிவித்தார்.

38 வருடகாலம் தபால் இலாகா வான் சாரதியாக யாழ்ப்பாணம் தபால்நிலையத்திலிருந்து ஓய்வுபெற்ற திரு.வி குருநாதபிள்ளைக்கும், யாழ்ப்பாணம் தபால்நிலையத்தில் பல வருடகாலம் சிற்றூழியராகக் கடமையாற்றி பதவி உயர்வு பெற்று இடமாற்றம் பெற்றுச் சென்ற திரு. நா. தங்கராசாவுக்கும் மேற்படி தபால் நிலைய ஊழியர்களால் இவ் விழா நடாத்தப்பட்டது. (கு)

## பண்டிதரின் நூல் வெளியீட்டு விழா

(புங்குடுதீவு)

ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் எழுதிய ''பச்சை மண்ணும் சுட்ட மண்ணும்'' நூல் வெளியீட்டுவிழாவும் பிரசாரக் கூட்டமும் நாளை புங்குடுதீவு பெருங்காடு சிவன்கோவில் வீதியில் நடைபெறவுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் திரு. ஏ. அமிர்தலிங்கம் நூலை வெளியிட்டுவைப்பார். யாழ்ப்பாண எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன், சாவகச்சேரி எம். பி. திரு- வி என். நவரத்தினம், மானிப்பாய் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் உட்பட பலர் உரையாற்றுவார்கள்.

புங்குடுதீவு மேற்கு பெரியபுலம் பிள்ளையார் கோவிலில் இருந்து எதிர்க்கட்சித் தலைவர் பண்டிதர், எம். பி. க்கள் ஆகியோர் ஊர்வலமாக அழைத்துச்செல்லப்படுவார்கள். (கு)

## அதிபருக்கு பாராட்டு

(அரியாலை)

''இப்பாடசாலையில் சிறந்த ஆசிரியர்களும் சிறந்த வசதிகளும் நிறைய இருந்தும் இதனைப் பயன்படுத்த முன்வராமல் சில பெற்றோர் பெரிய பாடசாலைகளை நாடிச் செல்வதால் இப்பாடசாலையின் வளர்ச்சி பெரிதும் பாதிப்படைகிறது என்பதை அவர்கள் மனதில் கொள்ள வேண்டும்''

இவ்வாறு நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலையில் நடைபெற்ற கல்விப் பொருட்காட்சியை ஆரம்பித்து வைத்த நல்லூர் வட்டாரக் கல்வியதிகாரி திரு. கு. சோமசுந்தரம் பேசுகையில் குறிப்பிட்டார்.

பாடசாலை அதிபர் திரு. க. மாணிக்கவாசகர் தலைமையில் நடைபெற்ற பொருட்காட்சியில் திரு. சோமசுந்தரம் தொடர்ந்து பேசுகையில் ''இப்பாடசாலையின் அதிபராக இருக்கும் திரு. மாணிக்கவாசகர் இப்பாடசாலையின் அதிபர் பதவிக்கு நியமிக்கப்பட்ட பின்னர் இப்பாடசாலையின் வளர்ச்சிக்காக எடுத்து வரும் முயற்சிகளைப் பாராட்டாமல் இருக்க முடியாது இதற்கு ஆசிரியர்களும் மாணவர்களும், பெற்றோர்களும் அளித்துவரும் ஒத்துழைப்பைப் பாராட்டுகின்றேன் என்றார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# "ஆர்வமுள்ள புதியவர்களை பழையவர்கள் மலடாக்கக் கூடாது"

## 'தோட்டக்காட்டினிலே' விமர்சன விழாவில் பேச்சு

(ஊர்காவற்றுறை)

"இலக்கியத்தின் மீது ஆர்வம்கொண்டு பணியாற்றும் புதிய தலைமுறையினர், 'தமது படைப்புகளை நூல்வடிவில் வெளியிடும்போது உற்சாகப்படுத்தவேண்டியது . சமூகப் பிரக்ஞையுள்ள ஒவ்வொருவனதும் கடமையாகும். இந் நிலையில் பழைய எழுத்தாளர்களோ இலக்கியத்தால் ஒன்றும் ஆகாதென்று கூறி, புதிய தலைமுறையினரை மலடுகளாக்க முனைவது கவலைக்குரியதாகும்."

இவ்வாறு காவலூர் இலக்கிய வட்டம் நடத்திய 'தோட்டக் காட்டினிலே' விமர்சன அரங்கில் பேசும்போது காவலூர் எஸ். ஜெகநாதன் கூறினார்.

வட்டத் தலைவர் திரு. ஆ. சபாரத்தினம் தலைமையில் புனித அந்தோனியார் கல்லூரியில் நடைபெற்ற அரங்கில் ஜெகநாதன் தொடர்ந்து பேசுகையில் "இலக்கிய வரலாற்று நூல்களில் பெயர் வருவதல்ல: புதிய சமுதாய வரலாற்றைப் படைப்பதே எழுத்தாளர்களின் நோக்கமாக இருக்கவேண்டும், நூல்வடிவல் வெளிவந்த மலையக இலக்கியங்களிலே 'தோட்டக் காட்டினிலே' முதன்மை ஸ்தானம் வகிக்கிறது.

"மலையகத்தின் புதிய தலைமுறை எழுத்தாளர்களான இவர்கள் நூலை வெளியிட்ட பின் மேடை கிடைத்ததென்று இப்போது இனம் கண்டதாகச் சிலர் நடிக்கிறார்கள். இதற்கு முன்பே இவர்களின் ஆற்றலை இனம் கண்டு 'ஈழநாடு' கட்டுரை வெளியிட்டு நன்கு அறிமுகப்படுத்தியிருப்பதைப் பெருமையுடன் குறிப்பிடத்தான் வேண்டும்" என்றார்.

திரு. நா. சுப்பிரமணியம் பேசுகையில் "எழுத்தாளர்கள் சலுகைகளுக்காகத் தமது கொள்கைகளைக் காற்றில் பறக்கவிடக்கூடாது. இந்தத் தொகுதியைத் தந்து நம்பிக்கையளித்த இவர்கள் 'முதிர்ச்சி' அடையும்போது பார்வை மாறிவிடக்கூடாது" என்று கூறினர்.

காவலூர் உதவி அரசாங்க அதிபர் திரு. சடாட்சர சண்முகதாஸ் பேசும்போது ஈழத்தில் எழுத்தாளர்கள் பிரசுர வசதியின்றி அனுபவிக்கும் மனக்கஷ்டங்களை எடுத்து விளக்கினர்.

திரு. டானியல் அன்ரனி, திரு. நெல்லை நடேஸ், திரு. பாக்கியநாதன் உட்படப் பலர் விமர்சன உரையாற்றினர்கள். மாத்தளை சோமு, வடிவேலன் இருவரும் பதிலுரை ஆற்றினர்கள். (கு)

# குறவர்கூட்டத்தை அகற்ற நடவடிக்கை

[மாவிட்டபுரம்]

காங்கேசன்துறை பட்டின சபை எல்லைகுள் நடமாடும் குறவர் கூட்டத்தை அகற்ற பட்டினசபை விசேட ஆணையாளர் திரு. க. சண்முகநாதன் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இக்குறவர்கள் திருட்டு முயற்சிகளில் ஈடுபடுவதுடன், சுகாதாரத்திற் தீங்கு விளைவிக்கும்வகையிலும் நடமாடுவதாலும், பட்டினத்தின் முக்கிய இடங்களை ஆக்கிரமித்துக் கொள்வதாலும் பொதுமக்களுக்கு மிகுந்த சிரமம் ஏற்பட்டு வந்தது.

இதனையடுத்து பட்டின சபை விசேட ஆணையாளர் திரு. க. சண்முகநாதன், காங்கேசன் துறைப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி திரு மேவின் பெர்னாண்டோவுடன் தொடர்புகொண்டு இவர்களை அகற்ற ஒழுங்கு செய்துள்ளார்.

இக்குறவர்களை பொலிசார் அகற்றுவதில் ஈடுபடுவார்கள். (கு)

## ஹிஜ்ரி விழா

(மன்னார்)

மன்னாரில் ஹிஜ்ரிவிழா இம்மாதம் 17ம் திகதி நடைபெறும்.

மன்னார் அல்அஸ்ஹர் மகா வித்தியாலயத்தில் மூதூர் எம். பி.யும் மன்னார் மாவட்ட அமைச்சருமான ஜனுப் எம். ஈ. எச். மஹ்ரூப் தலைமையில் நடைபெறும் ஹிஜ்ரி விழா கூட்டத்தில் தேசிய ஹிஜ்ரி விழாத் தலைவரும் போக்குவரத்து அமைச்சருமான ஜனுப் எம். எச். மொகமட் கலந்து கொண்டு அகில இலங்கை ரீதியிலும், மாவட்ட ரீதியிலும் நடைபெற்ற ஹிஜ்ரி விழாப் போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கு பரிசில்கள் வழங்குவார்.

ஹிஜ்ரி விழா ஞாபகார்த்தமாக தலைமன்னார், எருக்கலம்பிட்டி, நொச்சிக்குளம் ஆகிய இடங்களில் நிறுவப்பட்டுள்ள பாடசாலைக் கட்டிடங்களையும் போக்குவரத்து அமைச்சர் திறந்து வைப்பார்.

## அடியார்குழு விஜயம்

(வேலணை)

மாதத்தின் முதற் சனிக்கிழமை தோறும் வேலணை சாட்டி சிந்தாத்திரை மாதா கோவிலுக்கு திருச்செபமாலையோதும் அடியார்குழுவொன்று யாழ்ப்பாணத்தின் பலபாகங்களில் இருந்தும், தீவுப்பகுதியில்இருந்தும் செல்லவிருக்கின்றது.

திருச்செபமாலையோதும்அடியார்குழு செல்வதற்கு ஏற்ற வசதியாக மாலை 4 மணிக்கு யாழ்ப்பாணத்தில் இருந்து விசேட பஸ்சேவையும் ஒழுங்கு செய்திருப்பதாக கோவிலின் முன்னேற்றச் சங்க முக்கிய உறுப்பினர் திரு. செ. துரைசிங்கம் தெரிவித்துள்ளார். (கு)

## நிர்மலா சாமுவேல் சாம்பியன்

(அரியாலை)

வடமாகாண பூப்பந்தாட்ட பட்மின்டன் சங்கத்தால் நடாத்தப்பட்ட 9வது வருடாந்தப் பூப்பந்தாட்ட பெண்களுக்கான போட்டியில் வடமாகாணச் சாம்பியனாக செல்வி நிர்மலா சாமுவேல் தன்னுடன் போட்டியிட்ட செல்வி சியாமளா சாமுவேலைத் தோற்கடித்துத் தெரிவுசெய்யப்பட்டார்.

பெண்களுக்கான இரட்டையர் ஆட்டத்தில் செல்விகள் நிர்மலா சாமுவேலும், சியாமளா சாமுவேலும் தம்முடன் போட்டியிட்ட செல்விகள் ஜெயந்தி; ஜெரின் ஆகியோரைத் தோற்கடித்து வெற்றியீட்டினர்.

கலப்பு இரட்டையர் ஆட்டத்தில் செல்வன் வி. ரகுமாரும். செல்வி நிர்மலா சாமுவேலும் தம்மை எதிர்த்துப் போட்டியிட்ட செல்வன் சி. சிவநாயகம், செல்வி பி ஆனந்தலட்சுமி ஆகியோரைத் தோற்கடித்து வெற்றியீட்டினர்,

16 வயதுக் குட்பட்டவர்களுக்கான ஆட்டத்தில் முதலாவது இடத்தை செல்வன் எம். இளந்திரையனும் இரண்டாவது இடத்தை செல்வன் எம். மணிபல்லவனும் பெற்றனர்.

வடமாகாண பூப்பந்தாட்டச் சங்கத் தலைவர் திரு. என். ரி. சிவலிங்கம் தலைமையில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் வெற்றிபெற்றோருக்கான பரிசில்களையும் விருதுகளையும் வடபிராந்திய உதவி பொலிஸ் மாஅதிபர் திரு, பி. மகேந்திரன் வழங்கினர். போட்டிகள் யாவும் பரி யோவான் கல்லூரி பீற்றோ ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்றது. [கு)

......

## சாட்சிகள் வரவில்லை; எதிரிகள் விடுதலை

(மாவிட்டபுரம்)

தம்முன் எடுக்கப்பட்ட இரு வழக்குகளில் சாட்சிகள் சமுகமளிக்காமையால் அவ் வழக்குகளின் எதிரிகளை மல்லாகம் நீதிபதி விடுதலை செய்தார்.

சங்கானையைச் சேர்ந்த கார்த்திகேசு கனகசபை என்பவரது 7000ரூபா பெறுமதியான காரை வாங்கி மோசடி செய்ததாக முதலித்தம்பி கந்தையா என்பவருக்கெதிராக தொடரப்பட்ட வழக்கும், ஏழாலையைச் சேர்ந்த மு. சிவபாக்கியம் என்பவரது வீட்டைத் தீயிட்டுக் கொளுத்தி 1100 நஷ்டம் விளைவித்ததாக வ. ரவேந்திரஜோதி, இ. ஞானரஞ்சன், அ. அருள்குமரன், அ. செல்வகுமார் ஆகியோர் மீதும் தொடரப்பட்ட வழக்கும் மல்லாகம் நீதிமன்றத்தில் விசாரணைக்கெடுக்கப்பட்டது.

அச்சமயம் சாட்சிகள் சமுகமளிக்காமையினால் நீதிபதிதிரு. எஸ். இராசசிங்கம் எதிரிகளை விடுதலை செய்தார்.

இரு வழக்குகளிலும் எதிரிகள் சார்பில் சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினம், செல்வி. மோசாந்தி செல்வரத்தினம் ஆகியோர் ஆஜராகினர். (இ)

......

## சிவாஜிகணேசனின் மட்டுநகர் விஜயம்

(மட்டக்களப்பு)

நடிகர் திலகம் சிவாஜிகணேசன் அக்கரைப்பற்றுக்கு வருகைதரவுள்ளார்.

"மோகனப் புன்னகை" படப்பிடிப்புக்காக இம்மாத நடுப்பகுதியில் இலங்கைவரும் சிவாஜிகணேசன் பாசிக்குடாக் கடலில் நடைபெறும் படப்பிடிப்பில் கலந்து கொள்கிறார். அக்கரைப்பற்று சிவாஜி ரசிகர் மன்றத்தினர் அவருக்கு வரவேற்பு விழா ஒன்றை ஏப்ரல் 5-ம் திகதி நடத்தவுள்ளனர்.

நடிகர் திலகம் தமிழ்ப் பகுதிக்கு விஜயம் செய்வது இதுதான் முதல்தடவை என்பது குறிப்பிடத்தக்கது. (கு)

## சாரணர் தினம்

(மன்னார்)

மன்னாரில், பேடன்பவல் தினம் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. மன்னார் புனித சவேரியார் கல்லூரியில் கொடியேற்றத்துடன் ஆரம்பமான இவ்வைபவத்தில் மன்னார் மாவட்ட பாடசாலைகளைச் சேர்ந்த திரளான சாரணர்கள் கலந்து கொண்டனர்.

## "இரத்த புஷ்பங்கள்" வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

புரட்சிக் கவிஞர் புதுவை. இரத்தினதுரையின் கவிதைத் தொகுப்பான "இரத்த புஷ்பங்கள்" என்ற நூலின் வெளியீட்டு விழா ஏப்ரல் மாதம் 5ம் திகதி கொழும்பு விவேகானந்த சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வித்தியாதிபதி கி. லஷ்மணன் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் பிரபல கவிஞர்களும, விமர்சகர்களும் உரையாற்றவுள்ளனர். கலைஞர் பதிப்பகம் இந் நூலை வெளியிடுகிறது. (கு

## வீதி புனரமைப்பு

(பண்டத்தரிப்பு)

காரைநகர் விக்காவில் கிராம அபிவிருத்திச் சங்கம் தேசிய இளைஞர் சேவைமன்றத்தின் அனுசரணையுடன் சாம்பலோடை கடற்கரை வீதியை சிரமதான மூலம் புனரமைப்புச்செய்யும் வேலைகளை ஆரம்பித்துள்ளது.

வட்டுக்கோட்டைத் தொகுதி எம். பி. திரு தா. திருநாவுக்கரசு இந்த சிரமதானத்தை தொடக்கவைத்தார். (கு)

......

## பொலிசாரைத் தாக்கினராம்

# 3 சந்தேக நபர்களுக்கும் சரீரப் பிணை!

[மாவிட்டபுரம்]

மாவிட்டபுரத்தில் வைத்துப் பொலிஸாரைத் தாக்கியது தொடர்பாகக் கைதாகி றிமாண்டிலிருந்த 3 சந்தேக நபர்களும் சரீரப்பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

விசாரணைக்காகச் சென்ற காங்கேசன்துறைப் பொலிஸ் சப்இன்ஸ்பெக்டர் வீரசிங்கா, கான்ஸ்டபிள் உக்குபண்டா ஆகியோர் மாவிட்டபுரத்தில் வைத்து தாக்கப்பட்டதனையடுத்து பொலிசாரால் தேடப்பட்ட மாவிட்டபுரத்தைச் சேர்ந்த கணபதிப்பிள்ளைசோதிலிங்கம், சம்பையா இராசரத்தினம் அல்லது இராசு, கந்தையா முருகானந்தம் அல்லது குஞ்சன் ஆகியோர் சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினம் மூலம் சரண்புகுந்ததையடுத்து றிமாண்டில் வைக்கப்பட்டிருந்தார்கள்.

இவர்கள் மீண்டும் மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டசமயம் அவர்களை சரீரப் பிணையில்செல்ல அனுமதித்த நீதிபதி திரு. எஸ் இராசசிங்கம் விசாரணையை இம்மாதம் 17ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

சந்தேகநபர்கள் சார்பில் சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினம் ஆஜராகினர். [கு]

......

## சம்பளம் வழங்கப்பட வில்லையாம்

(புலோலி)

அச்சுவேலிக் கைத்தொழில் பேட்டை தீப்பெட்டித் தொழிற்சாலையில் பணிபுரியும் யுவதிகளுக்கு மூன்று மாதகாலமாகச் சம்பளம் வழங்கப்படவில்லையாம்.

இங்கு பணிபுரியும் இப்பெண்கள் கடமை புரிவதற்குப் பயிற்சியளிக்கப்பட்டனர் என்றும், பயிற்சியின் பின்னர், துண்டு வேலையடிப்படையில் பணிபுரிந்து வருகின்றனர் என்றும், பயிற்சிக் காலத்தில் வழங்கப்பட்ட வேதனத்தில் ஒன்றரை மாதத்திற்குரிய வேதனம் வழங்கப்படவில்லை என்றும் பயிற்சியின் பின்னர் தற்போது ஒன்றரை மாதங்களாகத் துண்டு வேலைஅடிப்படையில் பணிபுரிவதற்கான வேதனமும் வழங்கப்படவில்லை என்றும் அவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

......

## தொடர்ந்து விளக்க மறியல்

(மட்டக்களப்பு)

களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு க. பத்மநாதன் துப்பாக்கிச் சூடு சம்பந்தமாக சந்தேகத்தில் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ள உழவு யந்திர சாரதி திரு. அ. கதிர்காமப்போடியை எதிர்வரும் 13ம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு மாவட்ட நீதிபதி திரு. சி. சுந்தரலிங்கம் உத்தரவிட்டுள்ளார்.

ஏனைய சந்தேக நபர்களான உழவு யந்திர உரிமையாளர் ஜனுப். அப்துல் மஜீத், துப்பாக்கி உரிமையாளர் திரு. ச. துரைசிங்கம் உட்பட 11பேர் கடந்த வாரம் பிணையில் விடப்பட்டனர். சந்தேக நபரின் சார்பில் சட்டத்தரணி கி. பி. பற்றிக் ஆஜராகி இருந்தார். (கு)

# தங்கத்துரைக்கு எதிரான வழக்கு விசாரணை ஒத்திவைப்பு

(மட்டக்களப்பு)

முன்னாள் மூதூர் எம். பி. திரு. அ. தங்கத்துரைக் கெதிரான கொலைக் குற்றச்சாட்டு வழக்கு எதிர்வரும் ஜூன் 30-ம் திகதி விசாரணை செய்யப்படவுள்ளது.

1977ம் ஆண்டு கிளிவெட்டி இனக்கலவரம், திரு. அப்புகாமி, அவரின் மனைவி இந்திராணி ஆகியோர் கொலை சம்பந்தமாக மூதூர் முன்னாள் பாராளுமன்றஉறுப்பினர் திரு. அ. தங்கத்துரை அவரின் சகோதரர் திரு. அ. குமாரதுரை அண்மையில் பொலிசாரின் துப்பாக்கிக்கு பலியான கந்தப்போடி உட்பட ஆறு பேர்மீது சந்தேகத்தின் மீது குற்றம் சுமத்தப்பட்டது.

இவ்வழக்கு மட்டக்களப்பு உயர்நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்படவிருந்தது. நீதிபதி திரு. சி. நெத்தசிங்க வழக்கை யூன் 23 ம் திகதி ஒத்திவைத்ததோடு யூன் 30 ம் திகதி விசாரணைகள் மேற்கொள்ளப்படும் என தெரிவித்தார்.

சந்தேக நபர்கள் சார்பில் திரு. இரா சம்பந்தன் சட்டத்தரணி ஆஜரானர். (கு)

## பகலில் திருட்டு

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை சந்தியில் அமைந்துள்ள தனியார் வைத்தியசாலையிலிருந்து 350 ரூபா பெறுமதியான மருந்துப் பொருட்கள் திருடப்பட்டுள்ளன.

வைத்தியசாலையின்வைத்திய அதிகாரி திரு. கே. விஜயரத்தினம் வைத்தியசாலையை திறந்துவிட்டு அருகிலுள்ள கடைக்குச் சென்றசமயம் இத் திருட்டு இடம்பெற்றுள்ளதாம் காங்கேசன்துறைப் பொலிஸார் விசாரணைசெய்துவருகின்றனர். (கு

......

## வீதி விபத்து அதிகரிப்பு

(மன்னார்)

அண்மைக் காலத்தில் மன்னாரில் வீதிவிபத்துக்கள் அதிகரித்துள்ளன. இதனால் பாதசாரிகள் வீதிகளில் செல்லும்போது மிகவும் அவதானமாகச் செல்கின்றனர் (கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாராளுமன்றத்தில் ... கடந்த வாரம்

# தமிழ்மொழியிலும் சிறிதுநேரம் ராஜாங்க அமைச்சர் - இராசு - கூட்டணியினர் கடும்வாதம்

(நேற்றைய தொடர்ச்சி)

தொழிற்சங்கவாதியான ஆனந்த தசநாயக்கா ''பட்டினிக்கு உணவு என்று கூறி மக்களை ஏமாற்றித்தான் வாக்குப்பெற்றீர்கள்'' என்று கூறியதுடன் உங்களது அபிவிருத்தியெல்லாம் அமைச்சரவைஎண்ணிக்கையில் ஏற்பட்ட அபிவிருத்திதான்; உங்கள் நடவடிக்கையெல்லாம் ரோம் நகர் தீப்பற்றி எரிந்துகொண்டிருந்தபோது வீணை வாசித்துக்கொண்டிருந்த நீரோ மன்னனின் கதைபோன்றதுதான் என்றும் சென்ருர்.

## அமைச்சரவை செலவு ரூ. 90 லட்சம்

90 லட்சம் ரூபா அமைச்சரவைக்கு மாத்திரம் செலவிடப்படுவதாகவும் அவர் கூறிஞர்.

''எம்முடைய ஆட்சியில் மரவள்ளிக்கிழங்கை வாங்க முடியவில்லை என்பது உண்மைதான். மக்கள் அதை வாங்க வேண்டிய அவசியமுமில்லை; ஏனெனில் குறைந்த விலையில் அவர்களால் அரிசியை இப்போது வாங்கமுடியும்'' என்ருர் விவசாய அபிவிருத்தி ஆராய்ச்சி அமைச்சர் திரு. ஈ. எல். சேனநாயக்கா.

அமைச்சர் சேனநாயக்கா; ''இன்னும் சில தினங்களில் 'ஐலவசம' முன்ளுள்தலைவி சந்திரிகாபண்டாரநாயகாவுக்கும் மற்றையோருக்கும் எதிராக மோசடிவழக்கு தாக்கலாகும்'' என்று கூறவும், ''1983இல் உமக்கும், உமது பிள்ளைகளுக்கும் எதிராக நாம் வழக்குத் தாக்கல் செய்வோம்'' என்ருர் அநுரா பண்டாரநாயக்கா.

மூன்ரும்நாள், தமிழர் விடுதலைக்கூட்டணித்தலைவர் திரு. எம். சிவசிதம்பரம் பொருளாதார ரீதியில், புள்ளிவிபரங்கள் சிலவற்றுடன் தனது உரையை நிகழ்த்திய சமயம் சபையில் அமைதி நிலவியது

பொதுநிர்வாக பிரதியமைச்சர் திரு. ஹரீந்திர கொரியா குறுக்கிடமுனைந்த சமயங்களிலும் அவருக்கு இடமளிக்காமலே தனது பேச்சை ஆளுமையோடு நிகழ்த்திஞர் திரு. சிவசிதம்பரம்.

ஆனாலும் பின்னர் பிரதமர் உட்பட பலர் குறுக்கிட்டார்கள்; சில வேளைகளில் கூச்சல்களும் எழுந்தன.

திரு. ஹரீந்திர கொரியா குறுக்கிடமுற்பட்ட ஒருவேளை, ''அவர் பொருளாதாரம்பற்றி கொஞ்சம் தெரிந்துகொண்டிருக்கிருர்; அதனல்தான் அவர் அவசரப்படுகிருர். ஆனல் அரைகுறை அறிவு ஆபத்தானது; அதனல் நபன் அவருக்கு இடமளிக்க விரும்பவில்லை'' என்று அவரின் குறுக்கீட்டைத் தவிர்த்த திரு சிவசிதம்பரம், பிரதமர்குறுக்கிட்ட ஒருவேளை பிலும் தாம் பிரதமரிடம் வாதிட விரும்பவில்லைஎன்ருர்'

மூன்று மாதத்தில் 2வது தடவையாக அரசு இத்தகைய நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதாகவும் இப்படியான நடவடிக்கையைத் தொடர வேண்டிய நிலையில்தான் அரசு இருப்பதாகவும் அதனல்தான் தாம்இந்த நடவடிக்கையை எதிர்ப்பதாகவும் தெரிவித்து வரிச்சலுகைகள், வேலைவாய்ப்பு, உள்ளூர் உபஉணவு உற்பத்தி ஆகியவை பற்றியும் திரு சிவசிதம்பரம் பிரஸ்தாபித்தார்.

''மக்களின் பையில் இன்று பணமிருக்கிறது; ஒரு தச்சுத் தொழிலாளி இன்று 40 ரூபா உழைக்கிருன். ஏன், ஏழைப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்குக்கூட இப்போ அதிக வருமானம் கிடைக்கிறதே'' என்ருர் லலித்!

அமைச்சருடைய பேச்சில் குறுக்கிட்ட அவரது சட்ட மாணவரான பருத்தித்துறை துரைரத்தினம், 2500 ரூபாவுக்கு மேற்பட்ட வருமானமுள்ள சகலரிடமும் வரி அறவிட்டால் என்ன? என்ருர்.

15 ஆயிரம் பேராக அத்தொகையினர் இருந்தாலும் அப்படி வருடமொன்றுக்கு பெறப்படும் வரித்தொகை ஒரு நாளுக்கு மாவுக்கு மான்யம் வழங்கவே போதாது என்று அமைச்சர் கூறவும் 'அவர் உங்கள் மாணவர்' என்று குரல்கள் எழுந்தன.

அவர் சட்டத்துறையில் தான் எனது மாணவராக இருந்தார்; அதனல் நல்ல வழக்கறிஞராக இப்போ விளங்குகிருர். ஆனல் அவர் என்னிடம் பொருளாதாரம் படிக்கவில்லை; படித்திருந்தாரானல் இப்படிக் கேள்வி கேட்கமாட்டார் என்ருர், லலித்.

எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அனைவருமே அரசு, தனியார் ஊழியர்களுக்கான சம்பள உயர்வுக்கும் வலியுறுத்திஞர்கள்.

## -- மாலி --

கம்பஹா உறுப்பினர் திரு. எஸ். டி. பண்டாரநாயக்க 250 ரூபா என்று தொகை குறிப்பிட்டு வலியுறுத்திஞர்.

சம்பள உயர்வை வழங்குவதானல் அரசுக்குமேலும்நெருக்கடி ஏற்படுமென்று வர்த்தக அமைச்சர் கருத்துத் தெரிவித்தாலும் அதுபற்றி அரசு ஆலோசிக்கும் என்று பிரதமர் தெரிவித்தார்.

## மட்டக்களப்பு சூருவளி

பதினைந்து மாதங்களின்முன்னர் மட்டக்களப்பில் வீசிய சூருவளியின் தாக்கம் சபையில் மீண்டும் இத்தினங்களில் எதிரொலிக்கக் காரணமாக இருந்தவர் யாழ்ப்பாணம் உறுப்பினர் திரு. யோகேஸ்வரன்.

அங்கு நடைபெறும் புனர்நிர்மாண - அபிவிருத்தி வேலைகள் குறித்து பலத்த கண்டனம் தெரிவித்த அவர், 15 மாதங்களின் பின்னர் பாடசாலைகள் கட்டிமுடிக்கப்பட்டிருக்கவேண்டியவேளை இப்போதுதான் பாடசாலைக் கட்டடங்களுக்கான ஒப்பந்த வேலைகள் 'சேம்பர் ஓவ் கொமேஸ்' ஸ்தாபனத்திடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன என்ருர்.

## கூட்டணிக்கு எதிராகத் தேவா புகார்

அவர் அமர்ந்ததும் எழுந்த உள்நாட்டலுவல்கள் அமைச்சர் திரு. கே. டபிள்யு. தேவநாயகம் கூட்டணியினருக்கு எதிராக 'புயலை'க் கிளப்பிஞர்

## மட்டுநகருக்கு கூட்டணியும் அழிவுசக்தியும்

எப்போதாவது ஓரிரு தினங்கள் மட்டக்களப்புக்கு வந்து வாடிவீடுகளில் தங்கி, பிரதான வீதிகளில் பயணம்செய்யும் கூட்டணியினருக்கு அங்கு நடைபெறும் அபிவிருத்தி வேலைகள் எப்படித் தெரியப்போகிறது என்ற அமைச்சர் இயற்கை அழிவுக்கு உட்பட்ட அப்பிரதேசத்துக்கு நீங்களும் (த. வி. கூட்டணி) ஓர் அழிவாகத்தான் வந்தீர்கள் என்ருர் கோபமுற்றவராக.

அவ்வளவுதான் சபையில் பெரும் கூச்சல் எழுந்தபோது திரு .யோகேஸ்வரன் எழுந்தார்.

இருவருக்குமிடையே கடுமையான வாக்குவாதங்கள் எழ, ''யார் அழிவுகாரர் என்பதை அடுத்த தேர்தலில் பார்ப்போம்'' என்ருர் யோகேஸ்வரன்.

பின்னர் முன்னுள் கல்குடா உறுப்பினராகவிருந்த மாணிக்கவாசகர் இந்தச் சபையில் பேசியதே கிடையாது என்று திரு. தேவநாயகம் கூறவும் திரு. அமிர்தலிங்கம் ஆத்திரத்துடன் எழுந்துகொண்டார்.

''நோய்வாய்ப்பட்டு இறந்துபோன இச்சபையின் உறுப்பினராகவிருந்த ஒருவரைப் பற்றி அமைச்சர் இப்படி அவதூறு கூறக்கூடாது'' என்று கூறிய திரு. அமிர்தலிங்கம், சபை நிரந்தரவிதிகளைச் சுட்டிக்காட்டி ஒழுங்குப் பிரச்னையும் கிளப்பிஞர்.

## சபாநாயகர் - அமிர் வாதம்

இக்கட்டத்தில் சபாநாயகருடனும்வாதிட்ட அவர் ''முன்னுள்நீ திஅமைச்சர் நீதியாக நடந்துகொள்ளவேண்டும்'' என்ருர் .

இவ்வேளை சபை பெரிதும் அமளிப்பட்டுக்கொண்டிருந்தது.

அமைச்சர் அமர்ந்ததும் மட்டக்களப்பு பிரதேசத்தின் ஒரேயொரு தமிழர்விடுதலைக் கூட்டணி உறுப்பினரான பட்டிருப்பு கணேசலிங்கம் எழுந்தார்,

## சபாநாயகர் அமிர் வாதம்

அவருடையபேச்சு கூட்டணி உறுப்பினர்களை உற்சாக மடையவைத்தது.

அமைச்சர் சமர்ப்பித்த அபிவிருத்தி வேலைகள் பட்டியலை மறுத்துரைத்தார் திரு.கணேசலிங்கம்.

ஓய்ந்துபோன அந்தச் சூருவளி, மறுநாள் பிராந்திய அபிவிருத்தி அமைச்சர் திரு. இராசதுரை பேச ஆரம்பித்ததும் மீளத் தொடர்ந்தது!

அத்துடன். அதன் இரைச்சல் தமிழாகவும் ஒலித்தது?

## பேச்சும் குறுக்கிடும் தமிழிலேயே நடந்தது

அமைச்சர் தமிழில் பேச, கூட்டணி உறுப்பினர்கள் தமிழில் குறுக்கிட்டுக் கொண்டேயிருக்க. தமிழில் நடாத்த அந்த ராஜாங்கத்தை பிரதமர் உட்பட, சனபமுழுவதுமே சுவாரஷ்யத்தோடு ரசித்துக் கொண்டிருந்தது.

தமிழ் தெரிந்த அமைச்சர்களான அத்துலத்முதலியும், டென்சில் பெணுன்டோவும் அமைச்சரின் பேச்சின் இடையிடையே கரகோஷத்தை ஆரம்பிக்க, அது அரசாங்கக் கட்சி முழுவதும் பரவி எதிரொலித்துக்கொண்டிருந்தது.

இராஜாங்க அமைச்சர் திரு, ஆனந்ததிஸ்ஸ டி அல்விஸ் இருகாப்பினரையும் உற்சாகமூட்டிக் கொண்டிருந்தார்.

''மட்டக்களப்புப் பிரதேசத்தில் பிரதமரால் 60 வீடுகள் கட்டிமுடிக்க முடிந்தபோது அங்கு எத்தனை பாடசாலைகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன'' என்று குறுக்கிட்டார் திரு, கணேசலிங்கம்.

''பட்டிருப்புத் தொகுதியிலேயே 14 பாடசாலைகளில் 13 பாடசாலைகளுக்கு கூரை வேலைதான் பாக்கி'' என்ருர் இராசதுரை.

## ராசதுரைக்கு சவால்

''அப்படியிருக்குமாளுல் எனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை நான் இராஜிநாமா செய்வேன், நான் சவாலை விடுகிறேன்'' என்ருர் கணேசலிங்கம்.

திரு. இராசதுரை தொடர்ந்து பேசிக்கொண்டேயிருக்கவும் திரு. தா. சிவசிதம்பரம் எழுந்து ''சவாலை ஏற்றுக்கொள்கிறீர்களா''? எனப் பலதடவை கேட்டார்.

''அவ்வளவு பாடசாலைக் கட்டடங்களுக்கு எவ்வளவு ஓடு, செங்கற்கள் தேவை!'' என்ருர் அமைச்சர்.

''அப்படிக்கூறுங்கள்'' என்று கூறி அமர்ந்தார் சிவசிதம்பரம்!

''அழிவுற்ற 171 பாடசாலைகளில் 130 பாடசாலைகள் ஒக்டோபர் மாதத்தின்முன் கட்டி முடிக்கப்படும்'' என்று திரு. இராசதுரை பின்னர் கூற, மீண்டும் எழுந்த திரு. கணேசலிங்கம் ''அப்படி முடிக்கப் பட்டால் நான் ராஜிளுமாச் செய்கிறேன்'' என்று மீண்டும் சவால் விடுத்தார்.

திரு. தா. சிவசிதம்பரம் மீண்டும் எழுந்து ''சவாலை எற்கிறீர்களா?'' என்ருர்.

## சிறிமா கருத்து

பட்டக்களப்பு அபிவிருத்தி பற்றி உள்நாட்டமைச்சர், பிராந்திய அபிவிருத்தி அமைச்சர், மாவட்ட அமைச்சர் ஆகியோர் ஒருவர் கழுத்தை மற்றவர் திருகிக்கொண்டிருக்கிருர்கள் என்று சொன்ஞர் திருமதி சிறிமாவோ!

அரசாங்க சட்சியினர் 'ஆம்' என்றும், எதிர்க் கட்சியினர் 'இல்லை' என்றும் தெரிவிக்க திறைசேரி உண்டியல் சட்டமூலச்சட்டம் சபையில் நிறைவேறியது.

ஹரிஸ்பத்துவ உறுப்பினர் விஜேசிறியின் சமாச்சாரத்துடனேயே ஆரம்பித்த கடந்த வார அமர்வு, அவருடைய சமாச்சாரத்துடன்தான் முடிவையும் எய்தியது.

## பிரதமருக்கு கடும் கோபம்

பிரதமரும் அவரும் மீண்டும் மோதிக்கொண்டார்கள். பிரதமரின் மிகக் கடுமையான கோபத்துக்கு இலக்காஞர் விஜேசிறி.

உள்ளூராட்சி வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சின் ஆலோசனைக் குழுமுன் தனது குற்றச்சாட்டுக்களை நிரூபிக்க சம்மதித்த அவர், வெள்ளிக்கிழமை சபை ஒத்திவைப்புப் பிரேரணையின்போது, விசாரணைக் குழுவில் சட்டமா அதிபர், கணக்காளர் நாயகம், திறைசேரி அதிகாரிகள் ஆகியோரும் இடம் பெறவேண்டும் என்று கேட்டார்.

அப்போதுதான் அவசர அவசரமாகச் சபையினுள் பிரவேசித்த பிரதமர், ''முன்னறிவித்தல் கொடுக்காமலும் நானில்லாதவேளைகளிலும் இந்த உறுப்பினர் முக்கியமான பிரச்னைகளைத் தந்திரமாகக் கிளப்புவது வழக்கமாகிவருகிறது'' என்ருர். ஆத்திரத்தோடு பேசிய அவர், இவ்விதம் ஏற்படாதபடி சபாநாயகர் தமது உரிமையைப் பாதுகாக்கவேண்டும் என்றும் கோரிஞர்,

விசாரணைக்கு தான் சம்மதித்த போதும் உறுப்பினர் இன்னமும் தனது குற்றச்சாட்டுக்களைச் சமர்ப்பிக்கவில்லை என்ற பிரதமர் குற்றச் சாட்டுக்களைத் தெரிந்துகொள்ளாமல் எத்தகைய விசாரணை வேண்டும் என்பதை தீர்மானிக்கமுடியாது. ஒன்றில் என்னிடம் உறுப்பினர் தனது குற்றச்சாட்டுக்களைச் சமர்ப்பிக்கவேண்டும். என்னிடம் அவற்றைத்தர நம்பிக்கையில்லையென்ருல் என்மீது நம்பிக்கையில்லாப் பிரேரணையை அவர் கொண்டுவரவேண்டும் அதை எதிர்நோக்க நான் தயார் என்றுசடும் ஆத்திரத்துடனேயே கூறிமுடிக்கவும் சபை 20-ந் தேதி பி-ப 3 மணிவரை ஒத்திவைக்கப்படுகின்றது. என்ருர் சபாநாயகர்.

# எதிர்க்கட்சித் தலைவரின் மட்டுநகர் விஜயம்

[பட்டக்களப்பு]

மட்டக்களப்பு பகுதியில் உள்ள பிரச்னைகளை ஆராய்ந்து இப்பகுதியில் தமிழ விடுதலைக் கூட்டணி அலுவல்களை பலப்படுத்துவதற்காக எதிர்வரும் 22, 23ம் திகதிகளில் எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் மட்டக்களப்பில் தங்கிநிற்பார்.

அவ்வேளை அவருடன் யாழ்ப்பாண பா. உ. திரு. வெ. யோகேஸ்வரனும் வருகை தந்து கற்குடா தொகுதியிலுள்ள வாசரை என்னும் இடத்தில் நடைபெற்றுவரும் குடியேற்றப் பிரச்னையைப் பற்றி ஆராய்வர்.

பட்டககளப்பில் தமிழ் இளைஞர் பேரவையும், தமிழர் விடுதலைக் கூட்டணியும் 23ம் திகதி இணைந்து நடத்தும் விலைவாசி உயர்வு எதிர்ப்பு கண்டன கூட்டத்திலும் பங்குபற்றுவர் இக்கூட்டத்தில் பட்டிருப்பு பா. உ. திரு. பூ. கணேசலிங்கம், கற்குடா அமைப்பாளர் திரு. சீ. சம்பந்தமூர்த்தி, தமிழ் இளைஞர் பேரவை திரு. இராசாசுதேவா, திரு. கா. காசி ஆனந்தன் உட்படப் பலர் பங்கு பற்றுவார்கள். (கு)

## பெண்ணுக்கு கோடரிவெட்டு

(மன்னர்)

முருங்கன் பகுதியில்உள்ள கிராமம் ஒன்றில், மாமரம் ஒன்ருல் இரு பெண்களுக்கிடையில் ஏற்பட்ட சச்சரவை அடுத்து ஒரு பெண் கோடரியால் வெட்டப்பட்டு முருங்கன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்பள்ளார்.

கோடரியால் வெட்டியவர் என்றுகருதிசந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்ட பெண் மன்னர் நீதவானல் 500 ரூபா பிணையில் செல்ல அனுவதிக்கப்பட்டுள்ளார்.

முருங்கன் பொலிசார் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர். (கு)

## ரூ2லட்சம்செலவில் நீதிபதிக்கு விடுதி

(புலோலி)

பருத்தித்துறை மாவட்ட நீதிபதிக்கான விடுதியொன்று இரண்டு லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்படவிருக்கின்றது.

பருத்தித்துறை நீதிமன்ற நீதவான் விடுதிக்கு அருகாமையில் நிர்மாணிக்கப்பட்டு வரும் இம்மாவட்ட நீதிபதிக்கான விடுதி நிர்மாண வேலைகள் யூன் மாத இறுதிக்குள் பூர்த்தியாகிவிடுமென யாழ். கட்டிடத் திணைக்களத்திஞர் தெரிவித்தனர். (கு)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இன்னல்களைத் தாங்கவும் தியாகம் செய்யவும் இந்தியமக்கள் தயாராக இருக்கவேண்டும்

## இந்திராகாந்தி கருத்து

புதுடில்லி, மார்ச் 10
இந்திய மக்கள் இன்னல்களை யும் தியாகங்களையும் செய்யத் தயாராக இருக்க வேண்டும். அப்போதுதான் எமது சுதந்தி ரத்தைப் பாதுகாக்க முடியும் இவ்வாறு இந்தியப்பிரதம திருமதி இந்திராகாந்தி தெரி வித்துள்ளார்.

அகமதாபாத்தில் நிருபர்கள் மத்தியில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறி ஞர்.

அவர் மேலும்கூறியதாவது:
ஆப்கானிஸ்தான் நெருக்கடி காரணமாக இருபெரும் வல் லரசுகளான அமெரிக்காவும் ரஷ்யாவும் மோதிக்கொள்ளும் அபாயம் இருந்துவந்தது. இந் தியாவின் முயற்சியிஞலேயே அந்நிலை தவிர்க்கப்பட்டு உல கம் பேரழிவிலிருந்தும் காப் பாற்றப்பட்டது.

இந்தியாவின்எண்ணத்தைப் புறக்கணிக்கக்கூடாது என்று இப்போது அமெரிக்காவில்கூட கருதப்படுகிறது. (இ)

## அமெரிக்க பணயக்கைதிகள் விவகாரம் மாணவர்களின் தன்னிச்சைப் போக்குக்கு கண்டனம்

தெஹ்ரான், மார்ச். 10
அமெரிக்கப் பணயக்கைதி களை ஈரானிய அரசிடம் ஒப் படைப்பதற்கு பணயக்கைதி களுக்குப் பொறுப்பாகவுள்ள மாணவர்கள் பல கஷ்டமான நிபந்தனைகளை விதிக்கிருர்கள் என்று ஈரான் வெளிநாட்ட மைச்சர் ஜனுப் குதுப் ஸாதே தெரிவித்துள்ளார்.

பணயக்கைதிகளை அரசிடம் ஒப்படைக்கவோ சர்வதேச ஆணைக்குழுவினருக்கு பணயக் கைதிகளைப் பார்வையிட அனு மதி வழங்கவோ மாணவர் களுக்கு விருப்பமில்லை. இதனு லேயே அவர்கள் தன்னிச்சை யாக நடந்து கொள்கிருர்கள் என்றும் ஜனுப் குதுப் ஸாதே தெரிவித்துள்ளார். (இ)

## தேசத்துரோகம்: எதிர்க்கட்சித் தலைவர் கைது!

மொன்ரோவியா, மார்ச். 10
லைபீரிய எதிர்க்கட்சித் தலை வர் திரு. பகுட் மத்யூ தேசத் துரோகக் குற்றச்சாட்டின் பேரில் கைதுசெய்யப்பட்டுள் ளார்.

முற்போக்கு மக்கள் கட்சித் தலைவரான திரு. மத்யூ அர சுக்கு எதிராக பொதுவேலை நிறுத்தம் செய்யுமாறு பொது மக்களைத் தூண்டியதாகக் குற் றம் சாட்டப்பட்டே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மொன்ரோவிலுள்ள வத்திக் கான் தூதரக வளவில் மறைந் திருந்தபோதே திரு. மத்யூ கைது செய்யப்பட்டார்.

இவருடன் மக்கள்கட்சியைச் சேர்ந்த மற்றும் 33 பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். (இ)

# கியூபாவுக்குள் ஆக்கிரமிக்க அமெரிக்கா முயற்சி

## பழிக்குப்பழி வாங்கவும் தயார் என்கிருர் காஸ்ட்ரோ

ஹவானு, மார்ச். 10
கியூபாவுக்குள் ஆக்கிரமிக்க அமெரிக்காமுயன்றுவருகிறது. இவ்வாறு கியூபா அதிபர் ஜெனரல் பிடல் காஸ்ட்ரோ குற்றம் சாட்டியுள்ளார்.

மகளிர் சம்மேளனக்கூட்டம் ஒன்றில் பேசுகையில் அவர் மேலும் கூறியதாவது:
அமெரிக்கா மீண்டும் கெடு பிடி யுத்தத்தை ஆரம்பிக்க முயன்று வருகிறது.

கியூபாவுக்கு வரும் கப்பல் களை புளோரிடாவுக்குப் பல வந்தமாகத் திசைதிருப்பும் முயற்சிகளும் மேற்கொள்ளப் பட்டுவருகிறது. இந்நிலை நீடிக் கும் பட்சத்தில் அமெரிக்கா வைப் பழிக்குப் பழிவாங்கவும் கியூபா தயங்காது.

ஆப்கான் நெருக்கடியை சாட்டாக வைத்து இந்துசமுத திரப் பிராந்தியத்தில் தமது விருப்பத்தை நிறைவேற்ற அமெரிக்கா முயற்சிக்கிறது என்று அவர் கூறினர். (இ)

# சோவியத் துருப்புகள் ஆப்கானை விட்டு வெளியேறுவதே பிரச்னை தீரவழி

## சீனத் தலைவர் கூறுகிருர்

பீக்கிங், மார்ச். 10
ஆப்கானிஸ்தான் விவகாரங் களில் வெளிநாடுகள் தலையீடு உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

இவ்வாறுசீனத்தலைவர் திரு. குவாகுவா பெங் தெரிவித் தார்.

ஆப்கானிஸ்தான் உள்விவ காரங்களை அந்நாட்டுமக்களே தீர்த்துக்கொள்வர். அதற்கு வழிவகுக்கும் வகையில் ஏனைய நாடுகள் ஒதுங்கிக் கொள்ள வேண்டுமென்றும் திரு. பெங் தெரிவித்தார்.

சோவியத்துருப்புக்கள் ஆப் கானிஸ்தானைவிட்டு உடனடி யாக வெளியேறுவதே ஆப் கான் நெருக்கடியைத் தீர்ப்ப தற்கு ஒரே வழி என்றும் அவர் கூறினர். (இ)


**மீண்டும் ஆரம்பமாகிறது!**

ஒரு நம்பத்தகுந்த போக்குவரத்துச் சேவை
இலங்கையில் போக்குவரத்துத் துறையில் முன்னேடியான

**சிலோன் மோட்டர் ட்ரான்சிட் கொம்பனி (1955) லிமிடெட்.**

தமது போக்குவரத்துச் சேவையை 1980 மாரச் மாதம் 17-ம் திகதி முதல் மீண்டும் ஆரம்பிக்கவுள்ளது என்பதை பெருமையுடன் அறிவிக்கின்றது.

சி. எம். டி. (C. M. T.) கடுகதியில் யாழ்ப்பாணம் / கொழும்பு/யாழ்ப்பாணம் பாதையில் பகலில் தினமும் சொகுசாக, சுகமாக பயணம் செய்யுங்கள்.

**ஆசனப் பதிவு செய்யுமிடங்கள்:**

கொழும்பு - கொலட்ஸ் லிமிட்டெட்,
101, டி. எஸ். சேனுநாயக்க மாவத்தை,
பொறளை, கொழும்பு—8.
தொலைபேசி: 96101 (5 லைன்)

யாழ்ப்பாணம் - யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கம்
420, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 370, 438, 537

| புறப்படும் நேரம் | புறப்படும் இடம் | போய்ச்சேரும் நேரம் |
|---|---|---|
| காலை 5-30 மணி | கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்திற்கெதிரில் | யாழ்ப்பாணம் 4-30 மணி மாலை |
| காலை 5-30 மணி | (1) யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச்சங்கம் ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (2) கிருஷ்ண விலாஸ் ஹோட்டல்- கொடிகாமம் புகையிரத நிலையத்திற்கெதிரில் (காலை 6-45) | கொழும்பு 4-30 மணி மாலை |

**பயணச் செலவு**

கொழும்பு — யாழ்ப்பாணம் — ஒரு வழி — ரூபா 45/- ஒருவருக்கு
கொழும்பு — அனுராதபுரம் — ஒரு வழி — ரூபா 30/- ஒருவருக்கு

**சிலோன் மோட்டர் ட்ரான்சிட் கொம்பனி (1955) லிமிடெட்.**
(கொலட்ஸ் குழு அங்கத்தினர்)
101, டி. எஸ். சேனுநாயக்க மாவத்தை, கொழும்பு—8.
தொலைபேசி: 96101 (5 லைன்)


## தமிழகத்தில் ஜனதா 60 தொகுதிகள் கேட்கிறது

சென்னை, மார்ச். 10
நடைபெறவிருக்கும் தமிழக சட்டசபைத்தேர்தலில் அ. தி. மு. க. வுடன் கூட்டாகப் போட்டியிடவிருக்கும் ஜனதா கட்சி 60 தொகுதிகளைக்கோரி யுள்ளது.

முன்னுள் மத்திய அமைச்சர் திரு. பி. இராமச்சந்திரன் இத னைத் தெரிவித்தார்.

தேர்தலுக்கான அறிவிப்பு வெளிவருமுன் இத்தொகுதி ஒதுக்கீடு குறித்த முடிவை அ. தி. மு. க. ஜனதாகட்சியி டம் தெரிவிக்கவேண்டுமென்று தாம் வலியுறுத்தியுள்ளதாக வும் அவர் கூறினர். (இ)

## மண்டல சார்பற்ற கொள்கையை பேணிப் பாதுகாப்பதே பாகிஸ்தானின் நோக்கம்

### அதிபர் ஸியா ஹக் கூறுகிருர்

இஸ்லாமாபாத், மார்ச். 10
மண்டலசார்பற்ற கொள் கையைத்தொடர்ந்து பேணிப் பாதுகாப்பதே பாகிஸ்தானின் முக்கிய நோக்கம்.

இவ்வாறு பாகிஸ்தான் அதி பர் ஜெனரல் ஷியாவுல் ஹக் தெரிவித்துள்ளார்.

ஆப்கானிஸ்தான் நெருக் கடியால் பாகிஸ்தானுக்குப் பூரணபாதுகாப்புத் தேவைப் படுகிறது. எனவே பாகிஸ் தான் பெருமளவில் ஆயுதங் களை கொள்வனவு செய்யவுள் ளதென்றும் அவர் கூறினர்.

இன்றைய நெருக்கடிகுறித்து அமெரிக்காவுடன் ஏற்கனவே பாகிஸ்தான் பேச்சு நடத்தி யுள்ளதென்றும் விரைவில் சோவியத்யூனியனுடன் பேச்சு நடத்துமென்றும் ஜெனரல் ஹக் தெரிவித்தார். (இ)

## டிட்டோவுக்கு நோய் அதிகரிப்பு!

பெல்கிரேட், மார்ச். 10
யூகோஸ்லாவியஅதிபர் மார் ஷல் டிட்டோவுக்கு உள் இரத் தக்கசிவும் இருதயப்பலவீனம், சிறுநீரகக் கோளாறு ஆகியன அதிகரித்துள்ளதாக அறிவிக் கப்பட்டுள்ளது. (இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நாகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி, 6-45, 9-45
சனி, ஞாயிறு 2-45
பாலாஜி — மாலினி
உத்தமி பெற்ற ரத்தினம்

ஹரன் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி—பத்மினி
பேசும்தெய்வம்
(புத்தம் புதிய பிரதி)

வின்ஸர் 2வது ஜனத்திரள் வாரம்!
(யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30, 6-15, இரவு 9
நாகேஷ்-முத்துராமன் சௌகார் ஜானகி
"எதிர் நீச்சல்" (புதிய பிரதி)
குறிப்பிட்ட தினங்கள் மட்டும்

REGAL JAFFNA. சில தினங்கள் மட்டும்
Phone: 360
Daily at 2-00, 4-30, 7-00 & 9-30 p.m. only
"THE FLESH AND BLOOD SHOW"
(கண்டிப்பாக வயது வந்தவர் மட்டும்)
STRICTLY FOR ADULTS

வெலிங்டன் தினசரி 4 காட்சிகள்
(யாழ்ப்பாணம்)
சஞ்சீர் (ஹிந்தி) SANJEER
Daily 10-30, 2-15, 4-45, 7-15 & 9-30
(யாழ்நகர்) Phone: 7693
ARABIAN ADVENTURE
(Colour)

SRIDHAR JAFFNA
Daily 5 Shows—10-30 a.m. 2-30, 4-45, 7-00 & 9-30 p.m.
GANG WAR, AMBUSH, BEATINGS AND MURDER
The Crime War To End ALL Crime Wars
ANTHONY QUINN in
THE DON IS DEAD
(Adults Only)
(திகிலூட்டும் சண்டைகள் நிறைந்த படம்)

ராஜா தினசரி 4 காட்சிகள்
(யாழ்ப்பாணம்) சிவாஜி-விஜயா-சந்திரமோஹன
கவிதா நடித்த
ஜெனரல் சக்கரவர்த்தி
(ஈஸ்மன்ட் கலர்)

மனோஹரா A யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி ... பத்மினி
அன்புக்கரங்கள்

ராணி (யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள்
இல்லறம் இன்பமாக விளங்க "இருவர் உள்ளம்"
இணையவேண்டிய அவசியத்தை விளக்கும்
இணையற்ற குடும்பச் சித்திரம்
சிவாஜி கணேசன்-சரோஜாதேவி-எம்.ஆர். ராதா
பாலாஜி-ரங்காராவ் இன்னும் பலர் நடித்த
இருவர் உள்ளம்
(புதிய பிரதி)
திரைக்கதை வசனம்: கலைஞர் கருணாநிதி

SANTHI JAFFNA Phone: 7642
DAILY 10-30, a.m 2-30, 4-45, 7-00 & 9-30 P.M.
முழுக்குடும்பமும் பார்த்து மகிழ வேண்டிய
குலுங்கக் குலுங்கச் சிரிக்க வைக்கும் சிரிப்புச் சித்திரம்
இப்பொழுது 2-வது ஜனத்திரள் வாரம்!
Much Better than 'CRIME BUSTERS'
TERENCE HILL...BUD SPENCER — in
WATCH OUT WE'RE MAD! COLOR
EXCITING... FANTASTIC... THRILLING
SPECIAL SCHOOLS SHOWS Contact Manager


'குட்டித் தேவதை' யாகுவர

# 3 குழந்தைகளை காளிக்கு பலியாக்க கொலை செய்தார்

பெங்களூர், மார்ச் 10
காளிக்கு பலி கொடுப்பதற்காக மூன்று குழந்தைகளைக் கொலை செய்ததாக ஒரு சாமியாரையும் அவரது மூன்று சீடர்களையும் பெங்களூரிலுள்ள ஸ்ரீராமபுரத்தில் பொலிசார் கைது செய்தனர். இவர்களில் 50 வயதுள்ள பெண்ணும் ஒருவராவார்.

இதுபற்றிக் கூறப்படுவதாவது:

காளிக்கு பூஜை நடத்துவதற்கு "ரத்த அபிஷேகம்" செய்வதென இந்த சாமியார் திட்டம் தீட்டினார். இதற்கு இவர் தமது சிஷ்யர்களைப் பயன்படுத்திக் கொண்டார்.

"பச்சை ரத்தம்" சேகரிப்பதற்காக பச்சிளம் குழந்தைகளையே இந்த சாமியார் நாடினார். ஸ்ரீராமபுரத்தில் பல பகுதிகளையும் சுற்றிப் பார்த்து எந்தக் குழந்தையின் ரத்தத்தைப் பெறுவது என்பதை இந்தச் சாமியார் முடிவு செய்வார். அந்தக் குழந்தையைக் கொலை செய்து ரத்தம் சேகரிக்கும் பொறுப்பை இவரின் சிஷ்யன் சண்முகம் செய்து முடிப்பான். மற்ற இரு சிஷ்யர்களும் இந் பூஜையில் சாமியாருக்கு உதவுவார்கள்.

கடந்த நான்கு ஆண்டுகளாக இவர்கள் இந்தப் பூஜையில் ஈடுபட்டு வந்தார்கள். வழக்கமாக பௌர்ணமி தினத்துக்கு 2 அல்லது 3 தினங்களுக்கு முன்பாக இவர்கள் ஒரு குழந்தையைக் கொன்று ரத்தம் சேகரிப்பார்கள். பின்பு பௌர்ணமி தினத்தில் ஸ்ரீராமபுரம் சுடுகாட்டில் காளிக்கு "ரத்த அபிஷேகம்" செய்து பூஜை நடத்துவார்கள்.

1975ல் இவர்களது முதற் குறிக்கு இலக்கானவன் ரகு என்னும் 5 வயது சிறுவனாவான்.

## போத்தலில் ரத்தம் சேகரிப்பு

சண்முகம் இவனை தந்திரமாக அழைத்துச் சென்று அவன் கழுத்தில் ஒரு கத்தியினால் வெட்டி ஒரு போத்தலில் ரத்தம் சேகரித்தான். சிறுவன் ரகு எப்படியோ உயிர் பிழைத்துக்கொண்டான். இந்த ரத்தத்தை சேகரித்தமைக்காக சாமியார் சண்முகத்திற்கு 45ரூபா பரிசு வழங்கினார்.

ஆனால் 1977 அக்டோபர், 1979 மே, டிசம்பர் ஆகிய மூன்று தருணங்களில் இந்தக் கும்பலின் "ரத்தவெறி"க்கு 3 குழந்தைகள் பலியானார்கள்.

இந்த மர்மக் கொலைகள் பொலிசாருக்கு தலையிடியை உண்டாக்கின. என்ன முயன்றும் துப்புத் துலக்க முடியவில்லை.

இதற்கிடையில் எல்லாக் கொலைகளும் பௌர்ணமியன்று இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு முன்னால் நடந்திருப்பது பொலிசாருக்கு புதிய சந்தேகத்தைத் தோற்றுவித்தது.

பௌர்ணமி தினத்தில் சுடுகாட்டில் மந்திரீகர்கள் பூஜை போடுவார்கள் என்று ஒரு நம்பிக்கை இருப்பதால் பொலிசார் ரகசியமாக பெங்களூர் சுடுகாட்டுப் பகுதியில் கண்காணிப்பு நடத்தி வந்தனர். ஸ்ரீராமபுரம் சாய்பாபா சுடுகாட்டில் இந்தக் கும்பல் பௌர்ணமி தினத்தன்று பூஜை போட்டுக்கொண்டிருந்தபோது கையும் மெய்யுமாகப் பிடிபட்டது.

காளிதேவியின் புகைப்படமொன்றும், சமஸ்கிருதத்தில் எழுதப்பட்ட மாந்திரீக புத்தகமொன்றும் இக்கும்பலிடமிருந்து கைப்பற்றப்பட்டது.

பொலிஸ் விசாரணையில் எல்லா கொலைகளுக்கும் தாங்களே காரணமென்பதை சண்முகம் ஒப்புக்கொண்டான். கொலைகள் நடந்த முறைகளையும் அவன் பொலிசாரிடம் விவரித்தான்.

இந்த பூஜைகளை நடத்தினால் உலகத்தை அழிக்கக் கூடிய அளவுக்கு சக்தி பெற்றுவிடலாமென்றும், "குட்டித் தேவதை" போலாகிவிடலாமென்று சாமியார் தன்னிடம் கூறியதாக சண்முகம் மேலும் தெரிவித்தான். (வெ)

## இன்றைய பலன்

மாசி மாதம் 28ம் திகதி
11-3-1980 செவ்வாய்க்கிழமை

மேடம்: நடுநிலை தவறாது நல்லதைச் செய்வீர்கள். பழைய நண்பரின் சந்திப்பும் நிகழலாம். மேலிடத்து ஆதரவும் உண்டு.

இடபம்: ஆமை வேகத்தில் காரியங்கள் இடம்பெறும். பூமிப்பிணக்கும் தோன்றலாம். கருத்து வேற்றுமைகளைத் தவிர்க்கவும்

மிதுனம்: ஆனந்த மயமான வாழ்க்கை. களஸ்திர வழிப் பெருமையுமுண்டு. கண்ணியமான நடவடிக்கைகளுக்கு இடம் பெறலாம்,

கடகம்: தவறான பாதையைக் கடைப்பிடிப்பீர்கள். கொடுக்கல் வாங்கல்களைத் தவிர்க்கவும். நன்றாகச் சிந்தித்த பின்பே முடிவெடுக்கவும்

சிங்கம்: அரசியல் வாதிகள் ஆதாயம் பெறுவர். பெருமதிப்புண்டு. பிதா வழித்தனமுஞ்சேரும் பொன்னான தினம்.

கன்னி: இதயபட்டுதாவில் இன்பக் கூத்து நற்செய்திக் குமிடமுண்டு. மகிழ்ச்சி நிறைந்த வாழ்க்கையும் உண்டு சுபதினம்.

துலாம்: வெளியிடத்துத் தொடர்புகளில் நன்மையுண்டு பிள்ளைகளின் நடவடிக்கைகளும் பெருமை தரும். மற்றோர்கள் மதிப்புமுண்டு.

விருச்சிகம்: சிந்தனையால் உந்தப்படுவீர்கள். வாழ்விலும் மந்தநிலை காணப்படும். பொறுமை தவறக்கூடும். நிதானம் வேண்டும்.

தனுசு: உற்சாகம் குன்றும். உடல் நலமும் பாதிக்கப்படலாம். திருப்தியற்ற வாழ்வுமுண்டு. சுமாரான தினம்.

மகரம்: புதிய பாதையில் நடைபோடுவீர்கள். புண்ணிய விருப்பும் மேலிடும். முயற்சி செய்யின் உயர்ச்சியுண்டு.

கும்பம்: வாழ்க்கையில் சோர்வு தென்படும். தொழிலிலும் தடைகள் தோன்றும். எவ்விடத்திலும் [illegible] ண்டும்.

மீனம்: தன்மான வாழ்வுடன் தனமுடைமை வந்துசேரும் வர்கன சுகமுமுண்டு. வரவிலும் திருப்தி கிடைக்கும். சொகுசான தினம்.

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை


வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி, 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
ஸ்ரீகாந்த்-ஜெய்சித்ரா
பயணம்


## தென்னைமரம் ஏறிய சிறுத்தை!

சென்னை, மார்ச் 10
40 அடி உயரமான தென்னைமரத்தில் ஏறிய சிறுத்தைப் புலி ஒன்று 10 மணித்தியாலமாக மரத்தின்மேல நின்றது.

இந்த அதிசய சம்பவம் தமிழ்நாடு கள்ளிக்கோட்டையில் இடம் பெற்றது.

அதிகாலையில் குடியிருப்புப் பகுதியில் உலாவிய இப்புலி, நாய்ஒன்று குரைத்ததை அடுத்து தென்னைமரத்தில் ஏறியதாம்.

இப்புலியை வலைபோட்டு பிடிக்க மேற்கொள்ளப்பட்ட முயற்சி பயனற்றுப் போகவே 10 மணி நேரத்திற்குப் பின் பொலிசார் புலியை சுட்டுவீழ்த்தினர். (இ)

## தவக்கால நற்சிந்தனை



"நீங்கள் நினையாத நாழிகையில் மனுஷகுமாரன் வருவார். ஆதலால் நீங்களும் ஆயத்தமாயிருங்கள்"

(மத்தேயு 25—41)

என்று வேதம் சொல்லுகிறதே! நாம் நினையாத நேரத்தில் ஆண்டவர் வருவாராம். அப்போது நாம் என்ன செய்யப்போகிறோம்? பள்ளிப் பாடத்தைப் படிக்காமல் காலத்தை வீணாகக் கழித்து ஊர் சுற்றித் திரிந்து நண்பர்களுடன் கூடி மகிழ்ந்து விளையாட்டில் ஈடுபட்டிருந்த மாணவனைப் பார்த்து கல்வி அதிகாரி கேள்வி கேட்கும்போது விடை சொல்ல முடியாமல் விழிக்கும் மாணவனைப் போல், ஆன்ம இரட்சகர் கிறிஸ்துநாதர் நம்மை ஜீவிய இரட்சணியத்தைப் பற்றி, "மகனே உன் வாழ்நாளில் என்ன செய்துகொண்டிருந்தாய். உன்னால் மனித சமுதாயத்திற்கு ஏற்பட்ட பயன் என்ன?" என்று நம்மைக் கேட்கின்றபோது நாமும் விடை கூற முடியாமல் இருப்போம். இல்லை, எல்லாவித வினாக்களுக்கும் தக்க பதில் சொல்லி ஆண்டவரின் அன்பைப் பெற ஆயத்தமாக இருக்க நம்மால் கூடுமா? ஆம் என்றால் நாம் சிலுவையை மறந்தவராய் இருக்க முடியுமா? சிலுவையை நாம் சிந்தையில் நிலை நிறுத்திச் சிறக்க வைத்துவிட்டால் வேதனையும் வீண் பழியும் தாமாகவே ஓடி மறைந்துவிடுமல்லவா? அமைதி கொடுக்கும் அருமருந்து சிலுவையேயாகும்

- ஞான ஒலி -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுமிட்டோமோ
டயர், ரியூப்புகள்
வெள்ளை வர்ணம் பூசப்பட்டது.
5·60 x 13 ஒப்பல், மொறிஸ்-மறிஞ
5·90 x 13 ஒப்பல், மொறிஸ்மறிஞ,
6·50 x 13 கொன்சல், கோல்டன்
7·25 x 13 பென்ஸ், J2 வான்
5 20 x 14 மொறிஸ்மயினர், பியட்
5·90 x 14 A/55, A 60, மொறிஸ் ஒக் போர்ட்
6 40 x 14 வெலன்ட் சேபா வான் VW வான்
நாபன்ஸ் ரேட்ஸ்
யாழ்ப்பாணம்.

ஈழநாடு The EELANAADU 50 சதம்

SUMITOMO
TYRES & TUBES
WHITE SIDE WALL
5.60 x 15 A/50, V/W
5.90 x 15 403, 404
165 x 14 504
165 x 15 404, 403
நாபன்ஸ் ரேட்ஸ்
சேகரம் பில்டிங்,
74 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்
தொலைபேசி இல: 693

## அரசுக்கு 1 லட்சம் ரூபா

(மன்னார்)
அண்மையில் தலைமன்னார் இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்ட கடத்தல் பொருட்கள் மன்னாரில் ஏல விற்பனை மூலம் விற்பனை செய்யப்பட்டது. இந்த ஏல விற்பனையால் அரசிற்கு ஒரு லட்சம் ரூபா கிடைத்துள்ளது. (4)

### இன்று அடிமை நிலையிலிருக்கும்

# தமிழ் மக்களுக்கு விரைவில் நல்ல எதிர்காலம் உண்டு

## மயிலிட்டியில் 'அமிர்'

(மாவிட்டபுரம்)
"உலகில் எந்த இனமும் நிலையாக உயர்ந்த நிலையியோ, நிலையாக தாழ்ந்த நிலையிலோ இருக்கவில்லை. உயர்வும், தாழ்வும் மாறிமாறி வந்திருக்கின்றன. அதுபோன்று ஒருகாலத்தில் கொடி கட்டிப் பறந்த தமிழன் இன்று அடிமை நிலையிலிருந்தாலும் விரைவில் ஒரு நல்ல எதிர்காலம் உண்டென்ற நம்பிக்கை எமக்குண்டு"

இவ்வாறு மயிலிட்டி கலைமகள் வித்தியாலயம் மகா வித்தியாலயமாக தரமுயர்த்தப்பட்ட தலையொட்டிய விழா, புதிய கட்டிடத் திறப்புவிழா, நூல்நிலையத் திறப்புவிழா, கைப்பணிப் பொருட்காட்சி என்பன ஒருங்கே நடைபெற்றபோது அதில் பிரதம அதிதியாகக் கலந்துரையாற்றிய எதிர்க்கட்சித்தலைவரும், காங்கேசன்துறை எம்.பி. யுமான திரு. அமிர்தலிங்கம் கூறினார்.

அதிபர் திரு. சி. அப்புத்துரை தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் அவர் தொடர்ந்து பேசியதாவது:

"வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரிதான் மிகப் பழமையானது என எண்ணியிருந்தோம். அது 1813ம் ஆண்டில் டச்சுக்காரர் காலத்தில் உருவானது. ஆனால் அதற்குமுன் போர்த்துக்கேயர் காலத்தில் இந்தப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டதாக அறியும் போது இப்பாடசாலையின் பழமையை நாம் அறிகிறோம். பாடசாலைகள் எந்த ஒரு தனிப்பட்ட பிரிவினருக்கும் சொந்தமானவையல்ல. மக்கள் சொத்தாக அவை மதிக்கப்பட வேண்டியவை. சமுதாயப் பணியில் பாடசாலைகள் அதிக பங்கு வகிக்கவேண்டிய நிலையில் இன்று நமது இனம் இருந்து வருகிறது.

உலகத்தில் உயர்வையும் தாழ்வையும் நாம் மாறி மாறி காண்கிறோம். கிரேக்க நாகரிகம் ஒரு காலத்தில் உயர்ந்து விளங்கி பின் அழிந்து தற்போது வளர்ச்சிபெற்றுள்ளது. ரோம் சாம்ராஜ்யமும் இப்படியேதான். இருந்த இடம் தரியாமல் மறைந்த இனங்கள் இன்று தலை நிமிர்ந்து வாழ்கின்றன. தமிழன் ஒரு காலத்தில்சிறந்துவிளங்கினான். 5000 ஆண்டுகட்குமுன் தமிழன் உயர்ந்த நிலையிலிருந்தான். பின் அழிந்து 2000 ஆண்டில் சங்கம் வளர்த்து தமிழ்வளர்த்தான். தற்போது தாழ்ந்தநிலையிலிருந்தாலும் விரைவில் நல்ல எதிர்காலம் உண்டு என்ற நம்பிக்கையுடனே நாம் செயல்பட்டு வருகிறோம்" வீழ்ச்சியிலும் மன உறுதியுடனும். பாரம்பரியம், பண்பாடுகளை மறவாமலும் நாம் வாழ்ந்தால் மீண்டும் முன்னேறமுடியும்" என்றார்.

காங்கேசன்துறை கல்வி வட்டார வித்தியாதரிசி பொ. சிவஞானசுந்தரம், காங்கேசன்துறைப்பட்டின சபை விசேட ஆணையாளர் திரு. க. சண்முகநாதன், திரு. வே. சின்னத்துரை, திரு. இ. இராசதுரை உட்படப் பலர் உரையாற்றினர். கலைநிகழ்ச்சிகளும் நடந்தன.

## வனசிங்காவுக்கு மேலும் அவகாசம் மறுப்பு

(மட்டக்களப்பு)
இலங்கைத் தமிழாசிரியர் சங்கத்தின் தலைவர் திரு. டி. எஸ். கே. வனசிங்கா கடந்த சில மாதங்களுக்கு முன் மட்டக்களப்பு அரசடி மகாவித்தியாலயத்திலிருந்து கொழும்பு மாவட்டத்திற்கு இடமாற்றஞ்செய்யப்பட்டார். எனினும் இவர் அரசடி மகாவித்தியாலய அதிபர் விடுதியைச் சிறிது காலம் தனக்கு வழங்குமாறு கேட்டதன் பிரகாரம் மட்டக்களப்புக் கல்வி இலாகா இம்மாதம் 15ந் திகதி வரை அவகாசம் வழங்கியது.

தற்போது எதிர்வரும் 15ந் திகதியுடன் காலஎல்லை முடிவடைவதால் மேலும் அவகாசம் கேட்டுக் கல்வி இலாகாவுக்கு விண்ணப்பஞ்செய்த கல்விப் பணிப்பாளர் திரு, சமரஜீவ மறுத்துவிட்டதாகத் தெரியவருகிறது.

காரணம், தற்போது அதிபராகக் கடமையாற்றிவரும் திருமதி செ. நாகராஜாவிற்கு விடுதி தேவையென்பதால் வழங்கமுடியாதநிலை என கல்வி இலாகா மறுத்துள்ளது. [சு]

## பொலிஸ் ஜீப் குடைசாய்ந்து இருவர் ஆஸ்பத்திரியில்

(யாழ்ப்பாணம்)
பொலிஸ்ஜீப் வண்டி ஒன்று குடைசாய்ந்ததில் ஜீப்சாரதியும் பொலிஸ்காரர் ஒருவரும் அபாயகரமான நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பளைப்பொலீஸ் நிலையத்திற்குச் சொந்தமான இந்தப் பொலிஸ் ஜீப்பில் பளையிலிருந்து ஆனையிறவு நோக்கிச் சென்று கொண்டிருக்கையிலேயே ஜீப்குடைசாய்ந்தது. ஜீப்பில் சென்று கொண்டிருந்த பொலிசாரில் கான்ஸ்டபிள் வீரசிங்கமும் ஜீப்சாரதி ஹெட்டி ஆராச்சியும் படுகாயம் அடைந்தனர். இவர்கள் இருவரும் யாழ். ஆஸ்பத்தியில்அபாயகரமான நிலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ். பொலிஸ் அதிபர் கிங்ஸ்லி பெரேரா இவர்களை நேரில் சென்று பார்வையிட்டு அவர்களுக்கு ஆறுதல் கூறிச் சென்றார். (கொ)

### கமலம் மர்ம மரணம்:

## ராஜனைப் பார்க்க தொடர்ந்து அனுமதி மறுப்பு

(யாழ்ப்பாணம்)
பருத்தித்துறை டியூட்டரி மாணவி கமலத்தின் மர்ம மரணம் தொடர்பாக றிமாண்டில் வைக்கப்பட்டு யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கும் ராஜன் என்று அழைக்கப்படும் ராஜ்குமாருக்கு தொடர்ந்து பலத்த பொலிஸ்காவல் போடப்பட்டுள்ளது.

ராஜனைச் சுற்றி ஆயுதம் தாங்கிய பொலிசாரும், சிறைச்சாலை அதிகாரிகளும் காவல் புரிந்துவருகின்றனர். பெருந்தொகையான மக்கள் ராஜனைப் பார்ப்பதற்காகத் தினமும் ஆஸ்பத்திரிக்குச் சென்றபோதும் ஒருவரையும் பார்வையிட அனுமதிக்கப்படவில்லை.

ராஜன் ஆஸ்பத்திரி 17ம் வார்ட்டில் திரைமறைவில் வைக்கப்பட்டுள்ளார். (கொ)

### தி.மு.க....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
மு. கழக உறுப்பினர்கள் பலருடனும் கலந்தாலோசித்ததன் பின்னரே தாம் இந்த முடிவை மேற்கொண்டதாகக் கூறினார்.

### கூட்டணி...

(1-ம் பக்கத் தொட
தீர்மானித்துள்ளது. இம்மேதின ஊர்வலத்தில் தமிழ் ஈழ உற்பத்தி ஆடைகளை அணிந்து செல்லுமாறு தமிழ் மக்களைக் கோருவதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பட்டிருப்புத் தொகுதி தமிழ் இளைஞர் பேரவை அமைப்பாளர் திரு. இரா. மதுரநாயகம் இளைஞர் பேரவையின் தீர்மானத்திற்கு மாறாக, பலநோக்குக் கூட்டுவுச் சங்கத்தேர்தலில் போட்டியிட்டதாலும், உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தமிழர்விடுதலைக் கூட்டணியினருக்காகத் திருமலையில் பிரசாரம் செய்ததினாலும், அவரைப் பேரவையிலிருந்து தற்காலிகமாக நீக்குவதெனவும், இதற்கான விளக்கத்தை அவரிடம் கோருவதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

திரு. இரா. வாசுதேவா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் மாவை சேனாதிராசா, இறைகுமாரன், இரா. பன்னீர்ச்செல்வம், பொன். வேணுதாஸ் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (வெ)

### கச்சதீவில் இம்முறை

# இந்திய யாத்திரிகர்களே அதிகளவில் வந்தனர்

## 10 ஆயிரம் இலங்கையர் 11 ஆயிரம் இந்தியர்

(யாழ்ப்பாணம்)
கச்சதீவுக்கு இம்முறை 10,696 இலங்கை யாத்திரிகர்களும் 11,759 இந்திய யாத்திரிகர்களும் வந்திருந்தனர். இவர்களில் 8,623 இலங்கை யாத்திரிகர்களும், 9,527 இந்திய யாத்திரிகர்களும் நேற்று முன்தினம் திரும்பிவிட்டனர்.

இலங்கை யாத்திரிகர்கள் 359 படகுகளிலும், இந்திய யாத்திரிகர்கள் 393 படகுகளிலும் கச்சதீவு வந்து சேர்ந்தனர். 348 படகுகளில் 8,623 இலங்கை யாத்திரிகர்களும், 372 படகுகளில் 9,488 இந்தியா யாத்திரிகர்களும் நேற்று முன்தினம் வரை திரும்பிவிட்டனர்.

கச்சதீவில் திருட்டுக் குற்றத்திற்காக சந்தேகத்தின் பேரில் தெமட்டகொடையைச் சேர்ந்த ஈபாலன், க. கருப்பையா, கொட்டாஞ்சேனையைச் சேர்ந்த க. செல்லத்துரை, வெல்லம்பிட்டியாவைச் சேர்ந்த கே. டபிள்யூ சரத், ஏ. சந்திரசேனா, கண்டியைச் சேர்ந்த சவான் அங்கி, கொழும்பைச் சேர்ந்த சதாசிவம் ரத்தினம் ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.

800 ரூபா பெறுமதியான பொருட்கள் திருட்டு போய் விட்டதாக மதுரையைச் சேர்ந்த எம். கணேசு என்பவர் புகார் செய்ததைத் தொடர்ந்து பொலிசார் சந்தேகத்தின் பேரில் ஒருவரைக் கைது செய்தனர்.

கச்சதீவிலிருந்து நேற்று நண்பகல் வரை சகல யாத்திரிகர்களும் புறப்பட்டுக் கொண்டிருந்தனர். (க)

சாவகச்சேரி இந்துக்கல்லூரி
இல்ல விளையாட்டுப் போட்டி 1980
காலம்: 14-3-1980 வெள்ளி பி. ப. 2-30 மணி
முதன்மை விருந்தினர்:-
வைத்திய கலாநிதி கே. சண்முகநாதன் அவர்கள்
[மாவட்ட வைத்திய அதிகாரி, சாவகச்சேரி]
பெற்றோர்கள், பழைய மாணவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
அதிபர், ஆசிரியர், மாணவர்கள்
இந்துக்கல்லூரி, சாவகச்சேரி. 5197

## இன்று

(யாழ்ப்பாணம்)
உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை விஞ்ஞான கணித, கலை, கைப்பணி, தொழில் நுட்ப ஒன்றிணைந்த பாடத்திட்டப் பொருட்காட்சியை மானிப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. ச. தனஞ்சயன் இன்று காலை ஆரம்பித்து வைப்பார். இப் பொருட்காட்சி கல்லூரி அதிபர் திரு. எஸ். அரசரெத்தினம் தலைமையில் நடைபெறுகிறது. [கொ]

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெடினர்க்காக ... அச்சகத்தில் ... காபனத்தாரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் ... பட்டது.
... Sri Lanka under No QJ/8948/78 The EelanaaduF. B. No.49, Tlegram Eelanadu. Phone 389

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org